REGD. M. 4647

# திராவிடநாடு

விலை அணா 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 6 | 28-3-48 | இதழ் 42

## கட்டைவண்டிக்காலம்

:(o):

"உலகத்திலே ஒரு காலத்தில் நன்மையாக இருந்த பழக்கவழக்கங்கள் இன்று பெருந் துன்பமாயிருக்கின்றன. கையில் வில்லும் அம்பும் எடுத்துக்கொண்டு கட்டைமாட்டு வண்டியில் ஏறிக்கொண்டு நீங்கள் இன்றைய நாளில் பம்பாய்க்குப் போவதில்லை. பின் எதற்காக கட்டைவண்டிக் காலத்திற்கும், வில்லும் அம்பும் ஏந்திய காலத்திற்கும் நன்மையாயிருந்த பழக்க வழக்கங்களைப் பிடித்துக்கொண்டு அழவேண்டும்?"

ஜவஹர்.

## கலைச்செல்வி

“கலைத்தொண்டாற்றித் தமிழகத்தைக் களிப்புறச்செய்யும் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் கலை அரசியார் மதுரம் அம்மையாரின், திருக்குமாரிக்கு, கலைச்செல்வி என்று பெயரிட்டு வாழ்த்துகிறேன்” என்று தோழர் ம. பொ. சிவஞானம் அவர்கள், கலைவாணர் இல்லத்தில் நடைபெற்ற பெயர்சூட்டு விழாவில் பேசினார். கலைத்துறையினரும், பொதுவாழ்வினரும் பிரமுகர்களும் ஏராளமாக விழாப்பந்தலில் கூடியிருந்தனர். கலை அரசியார் கலைச்செல்வியை மன்றத்தினர் முன் கொண்டுவந்து, மலர்ந்தமுகத்துடன், நின்றுகொண்டிருந்த தன் துணைவர் நகைச்சுவை அரசரிடம் தர, நகைச்சுவை அரசர், குழந்தைக்குப் பெயர் சூட்டும்படி, ம. பொ. சி. அவர்களைக் கேட்டுக்கொண்டார். தோழர் அண்ணாத்துரை விழாவுக்குவந்திருந்தோரை வரவேற்றார். பெயர்சூட்டு விழாமுடிந்ததும், கலைவாணர், தமிழ் முரசு ஆசிரியர் ம. பொ. சி. யின் தமிழ் ஆர்வத்தையும், இனப்பற்றையும் பாராட்டி நன்றிகூறினார்.

## இராமச்சந்திரன் நினைவுப் பூங்கா.

இன்று ஏற்பட்டுள்ள அளவு சமூக விழிப்புணர்ச்சி ஏற்படாத நாட்களில், ஜாதிப் பித்தம் மேலோங்கி, வர்ணாஸ்ரமம் தலைவிரித்தாடிக் கொண்டிருந்த நாட்களில், சமரச ஞானம் பேசுவதே கடினமான காரியமாகக் கருதப்பட்ட காலத்தில், துணிந்து, சமுதாய சீர்திருத்தத் தொண்டாற்றிய வீரர், பழங்குடி மக்களின் பாதுகாவலர், தோழர் ராமச்சந்திரன் அவர்களின் நினைவுக்குக் குறியாக, சிவகங்கை மக்கள், கட்சி, மத, ஜாதிப் பாகுபாடின்றி, நிதி திரட்டி அழகியதோர் பூங்காவை அமைத்தனர்.

தோழர் கற்பூரசுந்திரபாண்டியன் அவர்கள் தலைமையில், தோழர் அண்ணாத்துரை, மேற்படி பூங்காவின் திறப்புவிழா வாற்றினார். தோழர் ராஜசேகரன், பூங்கா அமைக்கப்பட உதவியவர்களைப் பாராட்டிப் பேசினார். அன்று மாலை, விழாப் பந்தலில் கூடிய பொதுக்கூட்டத்தில், தோழர் அண்ணாதுரை, ‘குடி அரசு’ எனும் பொருள் பற்றிப் பேசினார். சமூக சீர்திருத் [illegible] தோழர் அ. பொன்னம்பலனார் பேசினார். புதுக்கோட்டை, காரைக்குடி, மதுரை, விருதுநகர் ஆகிய பல நகர்களிலிருந்து திராவிடத் தோழர்கள் பெருவாரியாக வந்திருந்து, மேற்படி விழாவில் கலந்துகொண்டனர்.

## கரூர் வழக்கு.

கரூர்வழக்குக்குகரூர் தோழர்கள், பொதுக்கூட்டத்தில், வசூலித்துத் தந்த 422 ரூபாயும், மற்றும் ஒரு சங்கத்தினர் தந்த 25 ரூபாயும், பெரியாரிடம் சேர்த்திருக்கிறேன். கரூர் தோழர்கள்வாக்களித்தபடி, இன்னும் 78 ரூபாய், தரவேண்டி இருக்கிறது. அதனையும் விரைவில் பெரியார் முகவரிக்கு அனுப்பிவைக்கக் கோருகிறேன்.

சேலம், விக்டோரியா மார்க்கட் மைதானத்தில், நடைபெற்ற கூட்டத்தில், வசூலான 320 ரூபாய், சேலம் தோழர் A. சித்தையன் வசம், தரப்பட்டிருக்கிறது, சேலம் நண்பர்கள் என்னிடம் வாக்களித்தபடி 500 ரூபாய் தரவேண்டியதற்கு 180 ரூபாய் குறைவாக வசூலானதால் இரண்டோர் நாட்களில் வசூலைப் பூர்த்தி செய்து 500 ரூபாயைப் பெரியார் முகவரிக்கு அனுப்பித்தருவதாகத் தோழர் சித்தையனும் நண்பர்களும், வாக்களித்துள்ளனர். அதன்படி நடந்துகொள்வார்கள் என்று நம்புகிறேன்.

அண்ணாதுரை.

## சீர்திருத்தத் திருமணம்

சேலம் தோழர் P. A. குப்புசாமி அவர்கள் திருக்குமாரர் தோழர் P. K. அர்த்தனாரிக்கும், தோழர் முனியப்பா அவர்கள் திருக்குமாரி செல்வி ராஜம் அம்மையாருக்கும், 14—3—48 காலை, செவ்வாய்ப்பேட்டை தேவாங்கப்பள்ளிக்கூட மண்டபத்தில், தோழர் C. N. அண்ணாத்துரை தலைமையில் சீர்திருத்தத் திருமணம் சிறப்புற நடைபெற்றது. மண்டபத்துக்கு வெளியே, தெருவில் அமைக்கப்பட்டிருந்த பெரிய அலங்காரப்பந்தலிலும், மண்டபத்திலும், ஏராளமான மக்கள் குழுமியிருந்தனர். இந்தத் திருமணத்துக்கு வந்திருந்த அளவு தாய்மார்கள் வேறு எங்கும் வந்ததில்லை என்று மக்கள் பேசிக்கொண்டனர். தேவாங்க சமூகப்பெரியவர்கள், மாறி வரும் உலகிலே, பழயமுறையை நீடிக்கச் செய்வதிலே அர்த்தமில்லை என்பதை உணர்ந்து, சீர்திருத்தத் திருமணத்தை ஆதரித்த பெருந்தன்மையைத் தோழர் சித்தையன் பாராட்டிப் பேசினார். சீர்திருத்தத் திருமணத்தின் சிறப்புகளை விளக்கித் தோழர்கள் பேளுக்குறிச்சி சோமசுந்தரம், E. V. K. சம்பத் ஆகியோர் பேசினர். தலைவர் முடிவுரை, வந்தனம் கூறலுடன், மணவிழா இனிது நடந்தேறியது.

## விதவைத் திருமணம்

21—3—48 காலையில், பண்ருட்டிக்கடுத்த புதுப்பேட்டையில், பிரபல வியாபாரி, தோழர் N. T. துரைசாமி அவர்களுக்கும், பண்ரக்கோட்டை, திரு. அனுசோது அம்மையாருக்கும், (விதவை) திருமணம் சிறப்புற நடைபெற்றது. சைனீக வகுப்பினரில், விதவைத் திருமணம் நடைபெற்றதில்லை. எனவே, இந்தத் திருமணத்துக்கு, பலமான எதிர்ப்பு ஏற்பட்டதுடன், சில தன்னலக்காரர்கள், இந்தத் திருமணத்தைத் தடுத்துவிட, பலவித முயற்சிகள் செய்தனர். ஆனால் மணமகன், மணமகள் தளராமல், இருந்ததுடன் தன் சமூகப்பெரியவர்கள் பலருடையமனதை மாற்றினார். ஒருசிலர் தவிர, சைனீக வகுப்பைச்சார்ந்த ஏராளமானவர்கள், மணவிழாவில் கலந்துகொண்டனர். தோழர் அண்ணாத்துரை, காலமாறுதலையும், சீர்திருத்தத்தையும் விளக்கிப்பேசினார்.

## பிரிட்டனுக்குத் திரும்பும் அபூர்வ பறவை

சுமார் 125 வருட காலமாக பிரிட்டனில் கூடுகட்டி வாழாத அபூர்வ பறவை யொன்று இவ்வருடம் மீண்டும் பிரிட்டன் திரும்பியுள்ளது. ‘அவசெட்’ என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் இப்பறவை கடந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் நார்போக்கின் வடகடற்கரையோரங்களில் வழக்கமாகக் கூடு கட்டி வாழ்ந்து வந்தது. இவ்வளவு வருடங்களாக இப்பறவை வேறுநாடுகளில் குடியேறலாமென்ற நோக்கத்துடன் சுற்றியலைந்திருக்கலாமென நம்பப்படுகிறது! இப்பறவையின் தோற்றத்தை நம் நாட்டிலுள்ள மீன் குத்திப் பறவைக்கு ஒப்பிடலாம். ஆனால் ஒரே ஒரு வித்தியாசம்தான். அதாவது ‘அவசெட்’டின் மூக்கு மேல் நோக்கி வளைந்திருக்கும். இதன் முனைகளிலிருந்து அதிருசியுள்ள [illegible]

# பழி சுமத்துவோரின் பார்வைக்கு

## சொர்க்கவாசலின் படப்பிடிப்பு

பட்டை நாமப் பாகவதர்!
கண்டிக்கும் காளையர்!
சைகை செய்யும் சரோஜாக்கள்!
வம்பளக்கும் பாட்டிமார்!
கோணங்கி தாசர்கள்!
வட்டமிடும் மோட்டைகள்!

* * *

அங்கு, கூடி இருந்தவர்கள், இப்படிப்பட்டவர்கள். அவர்களின், கோலம், நடவடிக்கை ஆகியவற்றைக் கொண்டு தரப்பட்ட பட்டப்பெயர்கள், மேலே குறிக்கப்பட்டுள்ளவை. —பட்டப் பெயர்களை நீக்கிவிட்டு, இவர்கள் அனைவருக்கும் பொதுவாக உள்ள, பெயரைக் கூறுவதானால், பக்தர்கள் என்று கூற வேண்டும்.

"ஏ! ஞானமான பக்தர்களையா, இப்படித் தூற்றுகிறாய்?" என்று, கோபிக்காதீர்கள்.

நாமம் பட்டையாக இருக்கும்போது, இந்தப்பாழான கண்களுக்கு அது தெரியும்போது, பட்டைநாமப் பாகவதர், என்று கூறுவது தவறு! வேறு எப்படிக்கூற முடியும்! நெட்டையான மனிதர், கருப்புநிறப் பெண், காவி உடைக்காரர், என்று கூறுவதுபோலத்தான், நாமம் பட்டையாக இருக்கக்கண்டு, பட்டைநாமக்காரப் பாகவதர் என்று கூறப்பட்டிருக்கிறது. மற்றவர்களின், நடைநொடி பாவனைகளைக்கண்டே, பொருத்தமான முறையிலே பட்டப்பெயர்கள் தரப்பட்டுள்ளனவேதவிர, கெட்ட நோக்கத்துடன், 'திட்ட' வேண்டுமென்று சொல்லிய தீய சொற்களல்ல.

அங்கு கூடி இருந்தவர்களின், 'இலட்சணத்துக்கு' ஏற்ற பெயருடன், அவர்களை அறிமுகப்படுத்திவிட்டோம். இனி இங்கு, நடைபெற்ற 'செயல்கள்' உள்ளனவே, அவைபற்றிச் சற்று கவனிப்போம்.

இடிபடுவது
இரைச்சல் போடுவது
காதணி கழன்றது எனும் கதறல்
கழுத்துமணி அறுந்ததேன அழுகை
கைவளைவிண்டதேனவிம்மல்
ஆடை அவிழ்ந்ததேனப் புலம்பல்.

இவை அங்கு நிரம்பி இருந்த 'நாதம்.' இரைச்சல், கதறல், விம்மல், புலம்பல், அழுகை — காதணி பறிபோவது முதற்கொண்டு, கட்டிய ஆடை அவிழ்ந்துவிடும் கோரம் வரை அங்கு நடைபெறுகிறது.

* * *

எங்கு? பகவான் பள்ளிகொண்ட கோலத்திலே காட்சி தந்து பக்தர்களைப்பரமபதத்துக்கு அழைத்துச் செல்லும், பணிபுரிகின்றாரே, அந்த ஸ்ரீரங்கக்ஷேத்திரத்திலே! வைகுண்ட ஏகாதசி! பக்தகோடிகள் குழுமியுள்ளனர்—அவர்களின் திருக்கோலத்துக்கு ஏற்ற பட்டங்களைத்தான் முதலிலே சூட்டப்பட்டிருக்கிறது— அவர்களின் செயலும், சித்தரிக்கப்பட்டிருக்கிறது.

வைகுண்ட ஏகாதசியன்று சீரங்கம் சென்று, சேவிப்பதை, சொர்க்கவாசல் காண்பது என்று பக்தகோடிகள் கூறுவர். அந்த சொர்க்கவாசல் மகாத்மீயத்திலே, வெளியே எடுத்துச்சொல்லக்கூடிய விஷயங்களைமட்டும், கூறியிருக்கிறோம். போலீஸ் ரிகார்டுகளைப் பார்த்தால், வேறு பல, விஷயங்கள் வெளிப்படக்கூடும். நீங்களேகூட மனக்கண்கொண்டு பார்த்தால், பல காட்சிகள் தெரியக்கூடும்.

* * *

அதோ ஒரு முதியவர்! அரங்கனைக் காணத்தான் ஆவலோடு வந்திருக்கிறார். அம்புஜம், பக்கத்தில் நிற்கும் பாவை. பேத்தி. பால்வடிதவை. ரங்கா! ரங்கா! ரங்கநாதா!—பக்தி ஆவேசத்துடன், அவர் கண்மூடியபடி, கரங்களைத்தலைமீது கூப்பியபடி வைத்துக்கொண்டு, துதிக்கிறார், ரங்கா! ரங்கா! என்று கூவும் சத்தம், ரெங்கனுடைய காதிலே, விழுந்ததோ இல்லையோ நாமறியோம், அதே நேரத்தில், அம்புஜம், தாத்தா! தாத்தா! என்று அலறிய சத்தம், பாட்டனாரின் காதிலே விழுந்துவிட்டது. என்னடி அம்புஜம்!—என்று கேட்கிறார். அம்புஜம், "தாத்தா வெளியே போய்விடலாம். கூட்டம் நெருக்கி விடுகிறது." என்று, பதறிக் கூறுகிறாள். பாட்டனாரும் பேத்தியும், ஒரே நேரத்தில், சற்று அருகே நின்றுகொண்டு, ரங்கா! ரங்கா! என்று துதிக்கும் ஒரு வாலிபனைப் பார்க்கிறார்கள். அம்புஜத்தின் கண்களிலே மிரட்சி! வாலிபன்முகத்திலேஓர்வித மலர்ச்சி! பாட்டனார் மனதிலே ஓர் குமுறல்!—"வா, போவோம்" பாட்டனார் கூறுகிறார்—"ஜாக்ரதையாக, வா—என்னோடு சேர்ந்துவா — துஷ்டப்பயல்கள் திரிந்துகொண்டு தொல்லை கொடுக்கின்றனர்" என்று கூறுகிறார். அம்புஜம் வாய்திறவாமல் வருகிறாள். "காலை மிதித்துவிட்டானா?" —அம்புஜத்தைத், தாத்தா கேட்கிறார். 'ஆமாம்'—அம்புஜம் பதில் கூறுகிறாள் மிரள மிரள விழித்துக்கொண்டு. அங்குகாணக்கூடியகாட்சிகளிலே, சற்று நாகரிகமான காட்சியிலே இது ஒன்று. அநாகரிகமான காட்சிகளோ அனந்தம்.

* * *

இதோ போலீஸ் ஸ்டேஷன்.

"எத்தனை சவரன் இருக்கும், செயின்?"

"ஆறு சவரனுங்க"

"கோயிலுக்குவரும்போது, கழுத்திலே போட்டுக் கொண்டிருந்தீர்கள்........?"

"ஆமாங்க! வீட்டிலேயா வைத்துவிட்டு வருவேன்"

"பெயர்?"

"பர்வதம்"

"சரி, உங்க விலாசத்தைக் குறித்துக்கொள்கிறோம். ஏதாவது தகவல் கிடைத்தால் சொல்லி அனுப்புகிறோம்."

"ரொம்பக் கவனிக்க வேணுங்க. நான் ஏழை. ஆறு சவரனுங்க — அனியாயமாக..............."

"சரி, சரிம்மா, இங்கே அழுது என்ன பிரயோசனம்? இவ்வளவு பெரிய கூட்டத்திலே, ஏன் வர வேணும்? பகவானை, வீட்டிலேயே இருந்து துதிக்கக்கூடாதா! நகை நட்டு போட்டுக்கொண்டு நீங்களெல்லாம் வருகிறீர்கள் என்று தெரிந்து கும்பலோடு கும்பலாக திருட்டுப் பயல்கள் வருகிறார்கள். இப்படி நகையைப் பறிகொடுத்துவிட்டு, எங்கள் பிராணனை வாட்டுகிறீர்கள். போ, போ. சொர்க்கவாசல் பார்க்க வந்துவிட்டீர்கள், சொர்க்க வாசல்!"

* * *

இவ்விதமான காட்சிகள், திருவிழாக்களிலே உருவாகத் தெரியும் விளைவுகள்—அதாவது நம்போன்ற ஊனக்கண் கொண்டவர்களுக்குத் தெரியக்கூடிய காட்சிகள். ஞானக்கண்கொண்டவர்களின் கண்களுக்கு முப்பத்து முக்கோடி தேவர்கள் தெரிந்திருக்கக் கூடும், பள்ளியை விட்டு ரங்கன் எழுந்திருக்கும் காட்சி தெரிந்திருக்கும். நாம கூறுவது, நம்போன்ற சாமான்யர்களின் கண்களுக்குத் தெரியக்கூடிய காட்சிகளைப்பற்றி. உள்ளே, பக்தகோடிகள் இவ்விதம் இருக்கும் போது வெளியே, 'புண்யவான்களை' அடுத்து, இந்த அங்கத்தை வளர்த்துக் கொள்ளலாம் என்று எண்ணி, சிலபலர் உள்ளனர் அல்லவா! அவர்களையும் பார்ப்போம்.

ஊமை
கூன்
குருடு
செவிடு
நொண்டி
மொண்டி
சித்திரக்குள்ளன்
சால் வயிற்றன்
சப்பை மூக்கன்
விசித்திரப் பிறவிகள்.

* * *

சொர்க்கவாசலைக் காணச் செல்பவர்கள், காணும்போது உள்ளே நடைபெறும் சேஷ்டைகள், அதே போது, வெளியே, உள்ள வறுமையாளர்கள், அவர்கள், "எங்கள் கருமத்தைப் பாருங்கள். தருமத்தைச் செய்யுங்கள்" என்று, உருக்கமாகக் கூவிப்பிச்சை கேட்கும் கொடுமை, ஆகிய, இந்த நிலையை, யாரும், வேண்டுமென்றே, 'இட்டுக்கட்டி' பேசுவது, என்று கூறமுடியாது. பக்தர்களேகூட, இந்தக்காட்சிகளைத் தாங்கள் கண்டதே இல்லை என்று கூறிவிடமுடியாது. உண்மை இது. எனினும் இந்த உண்மையை ஊராருக்கு, நாம், எடுத்துக்கூறும்போது மட்டும், உள்ளம் எரிகிறது, தூற்றும் பழிசுமத்தலும் தொடருகிறது, சூனாமானாவின போக்கே இதுதான், நமது புனித மார்க்கத்தைக் கேவலப்படுத்துகிறார்கள் என்று கண்டிக்கக் கிளம்பிவிடுகின்றனர்.

தூஷிக்கிறோம்— நாத்திகம் பேசுகிறோம் — புனிதமானவைகளைக் கேலிக்குரியதாக்குகிறோம், என்று, எவரும், முன்பின் யோசியாமல், பழிசுமத்திக்கொண்டு வருவதைத்தான், நாம், பல வருஷங்களாகப் பார்க்கிறோம். திராவிடர் கழகப்பிரசாரத்தால் உண்மையிலேயே, யாருக்குள்ள ஆதிக்கம் அழிந்துபடுகிறதோ, அவர்களல்ல, எதிர்ப்புணர்ச்சிகாட்டுபவர்கள், ஏளனம் செய்பவர்கள், பழிசுமத்துபவர்கள். அவர்கள் தங்கள் ஆதிக்கம் அஸ்தமித்துக்கொண்டு வருகிறதென்பதை உணர்ந்து, விட்டனர். 'இடையே உள்ளதுகள்' தான் இப்படிப் பழிசுமத்திக்கொண்டுள்ளன. தூஷிக்கிறார்கள்! கேலி பேசுகிறார்கள்! புனித மார்க்கத்தைக் கேவலப்படுத்துகிறார்கள்! — எனும், இந்தப்பழிகளை விளக்கி, ஆதாரத்துடன் மெய்ப்பிக்க, இவர்கள்யாரேனும் முன்வந்தனரா, இது வரையில் —முன்வருவரா, இனியாவது! அந்த வழிக்கே வருவதில்லை, ஆனால், பொருளற்ற பழிசுமத்தவோ கொஞ்சமும் கூசுவதில்லை.

தேர் திருவிழா, என்பவைகள், அர்த்தமற்றவைகள், மக்களின் நேரத்தையும் செல்வத்தையும் பாழ்படுத்துபவை, என்று திராவிடர் கழகத்தார் கூறுகின்றனர். உடனே, 'இடையே உள்ளதுகள்' "பார், பார்! பழிக்கிறான்! தேர் திருவிழாவைக் கேலிசெய்கிறான்! நமது புனித மார்க்கத்தைக் கேவலப்படுத்துகிறான்!" — என்று கூக்குரலிடுகின்றன. வைகுண்ட ஏகாதசி, மகாசிவராத்திரி, தீபாவளி, கார்த்திகைத் தீபம், போன்ற பல, திருவிழாக்களை, வீணாட்டம் என்று விளக்கினோம். அவ்விதமல்ல, அவைகள் இன்னின்ன வகையான விசேஷ பலன்களைக் கொடுத்துள்ளன, இந்தத்திருவிழாக்களினாலே, மக்களின் அகத்தூய்மையும் புறத்தூய்மையும், வளர்ந்திருக்கிறது, அன்பும் அறமும், வளர்ந்துள்ளன, என்று, ஆதாரம் காட்டுகின்றனரா,—இல்லை—கிடையாது, எனவே முடியாது.

ஒவ்வொரு திருவிழாவுக்குப் பிறகும், உருவான விளைவுகளை, அந்தந்த வட்டாரப் போலீஸ் அதிகாரிகளும், சுகாதார இலாக்கா அதிகாரிகளும், கூறமுடிகிறதே தவிர, இடையே உள்ளவர்கள், நம் மீது கோபித்துக் கிளம்புபவர்கள், என்ன கூற முடிகிறது. கடன்பட்டு, ரயிலில்இடிபட்டு, திருவிழா காணச் செல்கிறார்கள்— திரு அருள் கிடைத்ததோ, என்றால், இல்லை. திருகுபில்லை பறி போயிற்று என்றோ, காலராவோ காய்ச்சலோ, வந்துற்றது, என்றோதானே, பதில் கூறவேண்டி நேரிடுகிறது. இந்தத் தொல்லை ஏன் படவேண்டும் என்று கேட்கும் திராவிடர்கழகத்தைக் கண்டிப்பது அறிவுடைமையாகுமா? நல்லறிவாளர்கள் அனைவருமே சேர்ந்து செய்யவேண்டிய காரியமல்லவா, இது—நாட்டுமக்களை வீணாட்டத்திலே ஈடுபடாமல் தடுக்கும் காரியம். இதனைச் செய்யத்தவறியதோடு, வீணாட்டத்துக்கு உடந்தையாக இருப்பதோடு, இத்தகைய வீணாட்டங்களைக் கண்டித்துப் பேசி, மக்களைத் திருத்த முற்படும் திராவிட கழகத்தார் மீது, பழியும் சுமத்துவது என்றால், இவர்களின் போக்கை என்னென்பது. திராவிடர்கழகத்தார், தேர் திருவிழாக்களைப் பற்றிப் பேசினால் எழுதினால், சில திவ்யாத்மாக்களின் திருவிழிகளிலே தீப்பொறி கிளம்புகிறது.

"கோபம் வராமலா இருக்கும்; நீ நாக்கில் நரம்பின்றி, பட்டைநாமக்காரர், மொட்டைத்தலையினர், என்றெல்லாம் ஏசும்போது"—என்று கேட்கத் தோன்றும், சிலருக்கு. கட்டுரையின் துவக்கத்தின்போது, நாம் உபயோகப்படுத்திய பட்டங்கள், அவர்களின் நடைநொடி பாவனை, செயல் ஆகியவற்றைக் கவனிக்கும் போது, பொருத்தமான பட்டங்கள் என்றுஏற்படும். ஆனால் நாம் அதைக் கூறிவிட்டு தப்பித்துக்கொள்ளவிரும்

(18-ம் பக்கம் பார்க்க)

# அந்தமான் தீவு, சமதர்மிக்கு

பயல், இலட்சியம் பேசுகிறுன், இலட்சியம். அனுப்பு சைபீரியாவுக்கு!—ஜார் கட்டளையிட்டான், ஏழையை வாழவைக்க வேண்டுமென்று அறப்போர் தொடுக்க விரும்பியவர்களைக் கண்டபோது. சைபீரியா, சாவுக் கிடங்கு, பனிக்கட்டிப் பாலைவனம், மக்களைச் சித்திரவதைக்காளாக்கும் கொடுமை நிறைந்த இடம்—கொட்டும் குளிர்—கண்ணுக்கெட்டியதூரம் வரையில் பனிப் பாறைகள். அங்கு துரத்தப்பட்டனர், ஏழைக்கும் வாழ்வு வேண்டும் என்று வாதாடியதற்காக, பலர்—புரட்சிக்கு முன்பு.

என்ன சொன்னான் அந்தத் துஷ்டன? சீமான்களின் சிங்கார வாழ்வும் செருக்கும் ஒழிய வேண்டுமென்று சொன்னனா? எவ்வளவு துணிவு! எவ்வளவு ஆணவம்! அந்த ஆணவக்காரனை, பாஸ்டிலிக்கு அனுப்பு! — புரட்சிக்கு முன்பு பிரன்சு நாட்டு மன்னன், உத்தரவிட்டான் இதுபோல். பாஸ்டிலி, பயங்கரமான சிறைக்கூடம். உள்ளே புகுந்தவர்களின் உடலை, அங்குலம் அங்குலமாகச் சிதைத்துச் சாகடிக்கும் பாதாளக் கிடங்கு.

ஏகாதிபத்யத்தை இவன் எதிர்க்கிறுன்! வெடிகுண்டு வீசவா பழகிக்கொள்கிறுன்! சரி, இவனை, அந்தமான் தீவுக்கு அனுப்பு—பிரிட்டிஷ் ஏகாதிபத்ய வெறியர்கள், இப்படிக் கட்டளையிட்டனர். அந்தமான் தீவு, அலைகடலின் நடுவே உள்ள, அநாகரீகக் கூடு. மலேரியாவின் இருப்பிடம். மக்களை மிருகமாக்கிவிடக் கூடிய இயல்புடைய, தீவு.

சைபீரியா. பாஸ்டிலி, அந்தமான், அளவு, அமைப்பு, பெயர் ஆகியவற்றிலே,வேற்றுமையே தவிர, முறையிலே பார்த்தால் மூன்றும் ஒன்றுதான். உரிமை கேட்பவர்களை, எதேச்சாதிகாரிகள் கொடுமைக்கு ஆளாக்குவர் — அதுவே அவர்களின் முறை—ஊருக்கு ஒரு கொடுமைக்கூடம் இருக்கும், ஒவ்வோர் இடத்துக்கு ஒவ்வொரு வகையான பெயர் இருக்கும், ரஷியக் கொடுங்கோலனின் கொடுக்கு சைபீரியா, பிரன்சுக் காவலனின் விஷம் பாஸ்டிலி, பிரிட்டிஷ் ஏகாதிபத்ய இந்திய பூபாக ஆட்சியிலே அமைத்துக்கொண்ட ஆட்கொல்லி அமைப்பு, இந்த அந்தமான் தீவு. சைபீரியா, பாஸ்டிலி அந்தமான், போன்ற கொடுமைகளைத் தாங்கிய பிறகே, ஜார், எதேச்சாதிகார மன்னன், ஏகாதிபத்ய வெறி, எனும் முறைகளை முறியடித்துவிட்டு உலகு ஒரு படி முன்னேற முடிந்தது.

சைபீரியாவுக்கு, புரட்சி வீரர்களைத் துரத்தியவன், பிறகோர் நாள், ஆத்திரம் கொண்ட மக்களால், வெறிநாய் போல வேட்டையாடப்பட்டான்—பாஸ்டிலி, தூள் தூளாக்கப்பட்டது ஓர் நாள்—அந்தமான தீவும் கூட, கைதிகளின் கூடம் என்ற நிலையை மாற்றிக்கொண்டு, இனி வளமாக்கப்பட வேண்டிய ஓர் இடம் என்ற முறையிலே பேசப்படுகிறது. இந்த நாளிலே, அந்த நாள் ஆணவக்காரரின் பிரதிநிதி என்ற முறையிலே, ஒருவர் பேசுகிறுர்—வெளிப்படையாக—நாட்டினர் கேள்விப்பட்டால் கோபிப்பரே என்ற அச்சமின்றி, நல்லறிவாளர்கள் கேவலமாகக்கருதுவரே, என்ற கூச்சமுமின்றி.

அவர்களை அந்தமான் தீவுக்கு அனுப்புக!—என்று கூறுகிறுர்—கட்டளையிடும் அதிகாரம் இல்லாததால், அந்தக் கண்ணியவான், அனுப்புக, என்று கூறுகிறுர்—ஆளும் வாய்ப்புக்கிடைத்துவிட்டால், உத்தரவு பிறப்பித்தே இருப்பார், இன்னேரம்! யாரை, அந்தமானுக்கு அனுப்பும்படி, கூறுகிறுர்? ஏழைக்கும் வாழ்வு வேண்டும்—இல்லாமை ஒழியவேண்டும் — சமதர்ம மணம் கமழவேண்டும், என்று கூறுபவர்களை.

இந்த இலட்சியத்தைத் தவறானது, என்றோ தேவையற்றது என்றோ கூறுவது முடியாததாகிய, அறிவுத் துறையிலே, மக்கள் ஓரளவுக்கு இன்று முன்னேறிவிட்ட காரணத்தால். எனவே இந்த மகானுபாவரால், அந்தக் கைங்கரியத்தைச் செய்ய முடியவில்லை. ஆனல் சும்மா இருக்கவோ, சுயநலமிகளின் சுக வாழ்வைக் குலைக்கக்கூடிய, திட்டத்தை அனுமதித்துக்கொண்டிருக்கவோ, இஷ்டமில்லை. எனவே அவர், சமதர்மத்தைக் கண்டித்துப் பேசி, சமதர்மிகளைத் தண்டிக்க வேண்டும், அதுவும் ஆயுள் தண்டனையாக இருக்கவேண்டும், அதுவும், அந்தமான் தீவுக்குச் சென்று தண்டனையை அனுபவிக்கவேண்டும் என்று கூறுவதற்குப் பதிலாக, சிறந்த இலட்சியத்தைக் கொண்ட இந்தச் சமதர்மிகளை, அந்தமான் தீவுக்கு அனுப்பிவிட வேண்டும். அங்கு போய் அவர்கள் தமது அருமையான திட்டத்தின்படி, செயலாற்றிக் கொண்டிருக்கட்டும், என்று பேசியிருக்கிறார், கேலிக் குரலில்!

"தங்கள் வெளியே உலவிக்கொண்டு, உடம்பைக் கெடுத்துக் கொள்கிறீர்களாம். மகாராஜா இது கண்டு, மிகவும் மனவேதனைப்படுகிறுர். தங்கள் உடல் நலத்தைப் பாதுகாத்தேயாக வேண்டும் என்று தீர்மானித்து, அந்தக் காரியத்தைச் சரியானபடி செய்துமுடிக்க, என்னை இச்சிறு படையுடன், அனுப்பி இருக்கிறுர். தாங்கள், இனிக் கவலையின்றி, மன்னர், தங்களுக்கென்று குறித்துள்ள மாளிகையில் தங்கி, பாதுகாப்பாக இருக்கவேண்டும். இந்த நிமிஷ முதல், தாங்கள் அரசாங்க விருந்தாளி! அதற்கான, உறுதியான அடையாளம், இதோ!" —என்று கூறி, கரங்களிலே விலங்கிடுவர், ஆணவத்துடன், சற்று நகைச்சுவையும் கலந்த சுபாவமுடைய, எதேச்சாதிகார ஏவலர்கள். அந்த முறையிலே, சமதர்மிகளை அந்தமானுக்குத் துரத்துங்கள் என்று ஆணவத்தோடு ஆர்ப்பரிப்பதற்குப் பதிலாக, வேடிக்கையான நடையில், பேசுகிறுர், தங்கக் கோப்பையிலே, மதுரமான பாலை வார்த்து, அதிலே இரண்டோர் சொட்டுக் கொடிய விஷத்தைக் கலந்து, புன்னகையால் எவரையும் மயக்கும் பூவையிடம் தந்து, தரச் சொல்வதுபோல! சமதர்மிகளின் இலட்சியம், நடைமுறைக்கு ஏற்றதா, என்பதைப் பரீட்சிக்க, இந்தியா போன்ற பெரிய இடம் ஏற்றதல்ல, சமதர்மிகளைச் சர்க்கார், அந்தமான் தீவுக்கு அனுப்பி, சகல வசதிகளும் செய்து தரட்டும், அங்கு, சமதர்மிகள் பரீட்சை நடத்தி வெற்றி பெறட்டும், நாம் அதனைப் பார்த்துப் பிறகு, ஏது

# இந்தியா, இலாப வேட்டைக்காரருக்கு

யுத்தம் என்பதைத் தெரிந்துகொள்வோம், என்று பேசி இருக்கிறார், ஒரு பிரமுகர், காங்கிரஸ் ஆட்சியில், நேரு சர்க்காரின் கீழ் வாழ்ந்து கொண்டு, இந்த நாட்டு, வாலிபர்களின் காதுகள் செவிடாகாதிருக்கும்போது, அவர்கள் படித்த, கேட்ட, இலட்சிய ஊடை மங்கி மடியாதிருக்கும் போதே, அவர்களின் இலட்சியக் கனவுகள் கலையாதிருக்கும் நேரத்திலேயே, அவர்கள், இந்த நாட்டைப் பூந்தோட்டமாக்கிக் காட்டவேண்டும், மக்களுக்குப் புது வாழ்வு கிடைக்கச் செய்யவேண்டும் என்றெல்லாம் மனதிலே திட்டம் வகுத்துக்கொண்டிருக்கும் போதே, ஏகாதிபத்ய ஏவலன் அல்ல, பிரன்சு மன்னனல்ல, ரஷிய ஜார் அல்ல, கல்கத்தாவில் உள்ள இந்தியவியாபாரச் சங்கத்தலைவர் D.P. டிரைவர் என்பவர், பிப்ரவரி 27ந் தேதி, பேசியிருக்கிறார், சமதர்மிகளை அந்தமானுக்கு அனுப்பிவைக்க வேண்டும்—என்று. தோழர் ஜெயப்பிரகாஸ் நாராயணன் தலைமையிலே திரண்டுள்ள சமதர்மிகளை மட்டும், குறிக்கிறார் இந்தக் குணாளர் என்று எண்ணிவிட வேண்டாம். இப்போதுள்ள முதலாளித்வ முறை போக வேண்டும், தொழிற்சாலைகள் மக்களின் பொதுச் சொத்தாக வேண்டும், உற்பத்திச் சாதனங்கள் வேட்டைக் காடாக இருத்தலாகாது, தந்திரத்துக்கு ஏற்ற அளவு இலாபம், செல்வத்துக்கு ஏற்ற அளவு செருக்கு, செருக்குக்கு ஏற்ற அளவு சர்க்காரில் செல்வாக்கு என்றுள்ள முறை ஒழிந்து, சக்திக்கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற வசதி, என்ற திட்டம் ஏற்படவேண்டும், என்று யார்பேசினபோதிலும் சரி, அவர்கள் எல்லாம், அந்தமான் கைதிகள் ஆகவேண்டும், என்பது இவருடைய நோக்கம். சமதர்மம், பேசுபவர்கள் இருக்க வேண்டிய இடம் ஆயுள் தண்டனை பெறுபவர்கள் சென்று அவதிப்படுவதற்கு என்று முன்னம் அமைத்தார்கள், அந்தத் தீவுதான். அங்கு சென்று, சுற்றிலும் உள்ள கடல் அலையைக் கேட்டுக்கொண்டே மலேரியாவுடன் போராடி, மண்மேடுகளைச் சரிபடுத்தி, காடுகளைக் கழனிகளாக்க, காட்டாறுகளைக் கட்டுப்படுத்தி, வளம் உண்டாக்கச் சீர் செய்து, அந்த இடத்தை இலட்சியத்தை வெற்றிகரமாக நடத்தும் செயலிடமாக்கிக் கொண்டு, சமதர்மிகள் இருக்கவேண்டும் — அந்த நேரத்தில்—ஊரிலில்லாத வழக்கம் பேசிவந்த சமதர்மிகளின் தொல்லை நீங்கப்பெற்று, வேலை செய்ய மட்டுமே அறிந்துள்ள தொழிலாளர்களைக் கொண்டு, பொருளை உற்பத்தி செய்து குவித்துக்கொண்டு, வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள தூதுவர்கள் மூலம், எங்கெங்கு இலாப வேட்டைக்கு இடம்வசதியாக இருக்கிறது என்பதைக் கண்டறிந்து, அங்கெல்லாம் படை எடுத்துச் சென்று, இலாபத்தைக் குவித்து, இலட்சாதிகாரிகளை ஏஜண்டுகளாக அமர்த்திக் கொள்ளக் கூடிய நிலையிலுள்ள கோடீஸ்வரர்கள் நிம்மதியாக வாழ்ந்துகொண்டு, ஆட்சியாளர்களுக்கு ஆலோசனை கூறிக்கொண்டு, ஆலயக்காவலர்களிடம் அபிஷேக ஆராதனைக்கான செலவுகளைத் தாராளமாகக் கொடுத்துக்கொண்டு, தொழிலாளர்களிடம் சென்று, உலகின் நிலையாமை, பாவ புண்ணிய தத்துவ விளக்கம் ஆகியவைபற்றி 'உபன்யாசம்' செய்ய, கிருபானந்தர்களை அவரவரின் நாவாணிபத்துக்குத் தக்க அளவு கிரயம் கொடுத்து வாங்கி அமர்த்திக்கொண்டு, கன்னமும் கடைக்கண்ணும் சிவந்த காரிகையை அந்தி வேளையில் அழகுக் குன்றுக்கருகில் சந்தித்த ஆணழகனின் உள்ளத்தின் நிலைமைகளும், புற்றுக்குள்ளே, பாம்புகளின் காதல் விளையாட்டு நேரிட்டால் ஏற்படும் நிலைமைக்கும் உள்ள பொருத்தம், மாறுபாடு, ஆகியவைபற்றி, அழகான வெண்பா ஆயிரம்பாடி, அரங்கேற்றச் செய்துகொண்டும், மங்கை ஒருவள் தடாகத்தில் இறங்க, தாமரைகள் கூடி, அவளிடம் சண்டைக்குவர, அவள் அந்தத் தாமரைகளுக்கு, பொன்னும் மணியும் பரிசளிக்க, போதாவென்று அவைகூறி, செல்வியாளின் சேலையும் வேண்டுமென்று கூறி, அதனைப்பிடித்திழுக்க, மங்கை, வெட்கமும் கோபமுமகொண்டு தன் துகிலினைப் பிடித்திழுத்துக்கொண்டு நிற்பது போன்ற ஓவியத்தைத் தீட்டச் சொல்லிக்கொண்டும், இந்திய துணைக்கண்டத்தில் வாழ்வர்— அந்தமான் தீவிலே, சமதர்மிகள் இருக்க வேண்டும்.

ஆகஸ்டு பதினைந்துக்கு முன்பு, இப்படி ஒருவர் பேசியிருந்தால், இந்த நாட்டு ஏடுகள்யாவும், கனலைக் கக்கி இருக்கும். ஏகாதிபத்ய ஏஜண்டின் உறுமல்!—என்று தலைப்புக் கொடுத்திருக்கும் — ஏளனப்படங்கள் எவ்வளவோ வெளிவந்திருக்கும். சமதர்மம், உத்தமமான இலட்சியம், அந்த இலட்சியம் கொண்டவர்களை அந்தமானுக்கு அனுப்புக என்று ஆணவத்தோடு கூறியவரை வன்மையாகக் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றியிருக்கும் அதன்—அறிகுறியாக, ஹர்த்தால், வேலைநிறுத்தம் நடைபெற்றிருக்கும், மாணவர்களின் முழக்கம் முதற்கொண்டு மாகாணச் சட்டசபையிலே, ஒத்திவைப்புத் தீர்மானம் வரையிலே, பல்வேறு சம்பவங்கள் நடைபெற்று இருக்கும். இப்போது? திருடனைத் தேள்கொட்டியது போல்!! ஒரு துளி கண்டனக் குரலும் இல்லை. டிரைவர் எனும் பிரமுகர், பகிரங்கமாகத்தான் பேசினார். அவருடைய கருத்துக்கு மறுப்புரை கூறக்கூட இந்த நாட்டிலே, ஆள் இல்லை!!

எவ்வளவு தைரியம்—புதிய தைரியம் பிறந்திருந்தால், ஒரு முதலாளிக்கு, சமதர்மம், நாட்டிலே நடைமுறைக்கு ஏற்ற திட்டமல்ல, எங்காவது ஒரு தீவுக்கு வேண்டுமானால் அந்தத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வரட்டும் என்று பேசத் தோன்றியிருக்கும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டுகிறோம், நம் நாட்டு, இங்குலாப் ஜிந்தாபாத் முழக்கங்களே! அவருக்கு, வாய்க் கொழுப்பும், மனத்துணிவும் ஏற்பட்ட காரணம் என்ன என்பது கூடக் கிடக்கட்டும், இந்த புரட்சி வீரர்களின் வாய் அடைத்துப்போன காரணம் என்ன? பிரிட்டிஷ் ஏகாதிபத்யச் சிங்கத்தை, அதன் குகைக்குள்ளே நுழைந்து, அதன் பிடரியைப் பிடித்துக் குலுக்கிய வீரர்கள், தங்கள் படுக்கை அறையிலே முதலாளித்வம், புகுந்துகொண்டு, உனக்குவானமே கூரை, மண்மேடே மலரணை, போ தம்பி வெளியே, என்று ஆணவத்துடன் கேலியும் கலந்து பேசுவதைக் கேட்டும், என்ன செய்தனர்? என்ன செய்ய முடிந்தது! கோபம்கூட வெளியே தெரிய ஒட்டாத விதமாக, வெட்கமல்லவா அவர்களைக் கப்பிக்கொண்டு

# இருபதாண்டுக்குக் குத்தகை!

விட்டது. அவர்களின் நிலையிலே ஏற்பட்டுவிட்ட அதி அற்புதமான மாறுதலை நன்கு அறிந்துகொண்ட காரணத்தால் தான், அந்த முதலாளி, டிரைவர் என்பவர், அனுப்பு அந்தமானுக்கு என்று கூறினர். வியாபாரி அல்லவா, அவருக்குத் தெரியாதா மார்க்கட் நிலவரம்! இந்தச் சமயத்திலே, ஆணவச் சரக்குக்கு அதிக கிராக்கி உண்டு என்பதை அறிந்துகொண்டார், ஆகவேதான், அனுப்பு அந்தமானுக்கு என்று ஆணவத்தோடு பேசினர். தவறு, அவர்மீதா! அல்லவே! அந்த அளவுக்கு, வீராதி வீரர்களெல்லாம், விலா முறிந்தவர்களாகி விட்ட நிலை ஏற்பட்டுவிட்டதே. அபேத வாதம் பேசிய அலகாபாத் பண்டிதரே, டில்லி பார்லிமெண்டிலே, டாட்டா பிர்லாக் கோஷ்டிக்கு, அன்பும் ஆதரவும் கலந்த முறையிலே பதிலளிக்க முன்வந்தார் என்றால், மற்றவர்களின் மனம், மரத்துப் போனதிலேயோ, முதலாளிகளின் பண்டைக்கர்வம் உச்சநிலை அடைந்ததிலேயோ என்ன ஆச்சரியம் இருக்க முடியும். வாளிழந்த வீரனை, எதிரி தாளால் தாக்குகிறான், களத்தில். இங்கு, மன உறுதியும், கொள்கைப் பற்றும் குலைந்தவர்களை நோக்கி முதலாளித்வ முறை, கேலி பேசுகிறது, உன் இடம் எது தெரியுமா, தம்பி! என்று கேட்கிறது, ஊராள்வோருக்கு யோசனையும் அருளுகிறது, இதுகளை அந்தமானுக்கு அனுப்பு என்று.

பலர், சமதர்மத்தைக் குறை கூறியும் கண்டித்தும், பேசக் கேட்டிருக்கிறோம், இதற்கு முன்பெல்லாம். ஆனால் உடனே, தலைவர்களும், அவர்கள் மறந்துவிட்டால், வாலிபர்களும், கொதித்து எழுவர்—ஆங்கில ஏகாதிபத்யத்தின் துணை இருக்கிறது என்ற தைரியத்திலே முதலாளிகள் பேசுகிறார்கள், என்று கூறுவர். உள்ளபடியே, முதலாளிகளும் அச்சத்தோடு, நாவடக்கிக் கொண்டுதான் இருந்தனர். இப்போது, சமீப காலமாகக் கூர்ந்து கவனிப்போர், சமதர்மதத்துவத்தைக் கண்டித்தும், கேலி செய்தும், முதலாளிகளும் அவர்களின் ஏஜண்டுகளும், வெளிப்படையாகவே பேசுவதையும், அத்தகைய பேச்சுகள், பெரிதும் ஆணவம் கலந்து இருப்பதையும், உணரலாம். விளக்கம் கூறுவது, விண்ணப்பித்துக் கொள்வது, என்ற முறை அடியோடு போய்விட்டது; கண்டனம், கேலி, அறைகூவல், மிரட்டல், எதிர்ப்பு, இவை அதிகமாகிவிட்டன. அவ்வப்பொழுது முதலாளித்வ ஏஜண்டுகள் பேசும் பேச்சுகளை, ஆர அமரப்படித்தவர்கள், இதனை உணரலாம்.

சமதர்மம் சிறந்த இலட்சியம் தான்—ஆனால் தேச விடுதலைக்குப் பிறகுதான், எதைப்பற்றியும் யோசிக்க முடியும்.—என்று கூறின காலம் போய், சமதர்ம வாழ்வினாலே தான், இந்நாட்டுக்கோடிக்கணக்கான மக்களின் வறுமை ஒழியும், அத்தகைய வாழ்வு கிடைக்கும்படி செய்யவேண்டுமானால், ஏகாதிபத்யம் தொலைய வேண்டும், என்று வீர முழக்கம் செய்த காலம் போய், சமதர்மம், சமதர்மம், என்று ஏதோ ஏட்டிலுள்ள தத்துவத்தைப் பேசிக் கொண்டுள்ளனர் சிலர், இவர்கள் நாட்டின் நிலையை அறியாதவர்கள், என்று நையாண்டி பேசும் காலம் பிறந்தது, சமதர்மிகளின் கூக்குரலுக்காக வேண்டி, நாங்கள், முதலாளித்வ முறையை ஒரே அடியாகப் பெயர்த்தெறியும் பேயாட்டத்தில் இறங்க மாட்டோம், என்று முதலாளிகளுக்கு அபயம் அளிக்கும் காலம் தோன்றி, முதலாளித்துவ முறை மீது அனாவசியமாகச் சிலர் பழி சுமத்துகிறார்கள், சர்க்கார் இதற்கெல்லாம் இடம் அளிக்கக் கூடாது, தொழில்களைச் சர்க்கார் உடைமை ஆக்குவது, சமதர்மத் திட்டத்தின் படி நடப்பது என்றெல்லாம் பேசுவது, தொழில் வளருவதைக் கெடுத்துவிடும், தொழில்களிலே பணம்போட முதலாளிமார்கள் முன்வரமாட்டார்கள், என்று, சர்க்காரையே முதலாளிகள் மிரட்டும் காலமும் தோன்றி, இப்போது சமதர்மிகளை அந்தமானுக்கு அனுப்புகஎன்று சர்க்காருக்கு, (வேடிக்கைக்காக!!) யோசனைகூற, முதலாளிமார்கள் துணிவுகொண்ட காலம் பிறந்திருக்கிறது. தண்டிக்குநடந்ததும், தடியடி பட்டதும், ரௌலட் சட்டத்தை உடைத்ததும், லஜபதி இறந்ததும், பரங்கியை எதிர்த்ததும், பகத்சிங் தூக்கிலேறியதும், சிறைகளை நிரப்பியதும் நீலன்சிலையினை அகற்றியதும், சத்தியாக்கிரகமும், குமரன் சாவும், இவை எல்லாம், கடைசியில், ஏழையை வாழவைக்க ஏற்றதிட்டம் சமதர்மம் என்று கூறுபவர்களை, அந்தமான் தீவுக்கு அனுப்புக, என்று கூறும், டிரைவர்களை உண்டாக்கத்தானா, பயன்படவேண்டும்? வீரப் பணிபுரிந்த வாலிபர்களைக் கேட்கிறோம்.—விவேகிகளை, சிந்திக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்—திக்குக்கொருவராகத் திரும்பிக்கொண்டுள்ள தீவிர வாதிகள் அனைவரையுமே கேட்கிறோம், இந்த நிலையைக் காணவா, இவ்வளவு போராட்டமும் நடைபெற்றது?

* * *

**உங்களுடைய அற்புதமான இலட்சியங்களை மூட்டைகட்டி வையுங்கள். குறைந்தது ஒரு 20 வருஷகாலத்துக்கு, முதலாளித்வ முறைக்கு, இப்போதுள்ளது போலவே, வாழ்வதற்கு, இடம் தாருங்கள். போருக்கு முன்பு இருந்தது போன்ற அளவு வரி மட்டும் இருக்கவேண்டும், தொழிற்சாலைகளுக்கு. தொழிற்சாலைகளைக் கட்டுத்திட்டம் செய்யும் போக்கும் கூடாது. இவைகளின்றி தன்னிச்சையாக நடந்து கொள்ளும், உரிமையை, முதலாளித்வத்துக்கு 20 வருஷகாலம் அளித்தால் போர்க்காலத்துக்கானாலும் சரி, சமாதானகாலத்துக்கானாலும்சரி, எதற்கும் தேவையான பொருள் வசதியுடன் கூடிய, தொழிற்சாலைமுறை மேலோங்கிய இந்தியாவை, நாங்கள் உருவாக்கிக்காட்டுகிறோம்.**

**தொழிற்சாலை முறை இப்போதுதான், காலூன்றத்தொடங்கியுள்ள இந்தச்சமயத்தில், பழமை முறையைப் பெயர்த்தெடுத்துவிட்டு, புதியமுறைகளைப்பரீட்சை பார்ப்பது, நல்லதல்ல.**

**இவ்வளவு பெரியதுணைக்கண்டத்திலே, சமதர்மம் போன்ற இலட்சியங்களைச் செயல்முறைக்குக் கொண்டுவந்து பரீட்சை பார்ப்பதைவிட, சர்க்கார், அந்தமான்தீவு போன்ற ஏதேனும் ஓர் குறிப்பிட்ட இடத்திலே, சமதர்மத்திட்டத்தைப் பரீட்சை**

(10-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

காஞ்சி] 28—3—48 [ஞாயிறு

# புயலுக்கு முன்!

●

போரினால் ஏற்பட்ட புண் ஆறு முன்பே, இரத்தவெள்ளம் பாய்ந்தோடிய இடங்களிலே, கறை போகா முன்பே, பிணவாடை அடியோடு ஒழியா முன்பே, நசித்த தொழில்கள் மீண்டும் தலை எடுத்துப் பழைய நிலையைப் பெறுவதற்கு முன்பே, பொருளாதாரச் சீர்குலைவு சரிப்படுத்தப்படாத முன்பே, இடிந்த கட்டிடங்கள் புதுப்பிக்கப்படுவதற்குள்ளாகவே, பாழான வயல்களிலே, மீண்டும் பயிர்வளரு முன்பே, மற்றோர் போர் மூண்டுவிடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாக, பல நாடுகளிலேயும் உள்ள தலைவர்கள், எச்சரிக்கை விடுக்கத் தொடங்கி விட்டனர்.

அந்தந்த நாடுகளிலேயும், கிடைத்துள்ள அதிகாரத்தைப் பிறர் பறித்துக்கொள்ளாமலிருக்கவும், சேகரிக்கப்பட்ட செல்வாக்குச்சிதறிவிடாதபடி தடுக்கவும், உள்நாட்டுப் பிரச்னைகளிலே மக்கள் கவனம் செலுத்தாதபடி தடுக்கவும், போர், போர், என்ற திகிலை ஊட்டுவது, ஆதிக்கத்தை இழக்க மனமில்லாத சில அரசியல் தலைவர்களின், தந்திரம், என்றபோதிலும், போர் மூண்டு விடுமோ, என்று அனைவருமே சந்தேகிக்கக்கூடிய அறிகுறிகள் பல, காணப்படுகின்றன.

ஐரோப்பிய கண்டமே, இன்று, குத்துச்சண்டைக்குத் தயாராக நிற்கும் இரு பயில்வான்கள், காலை ஊன்றிக்கொண்டு, இடத்தின் அமைப்பையும், தாம், உலவவேண்டிய முறையையும் பற்றி குறிபெடுக்கும், நிலைமையிலேயே இருக்கிறது.

நாஜி ஜெர்மனியை வீழ்த்துவதற்காக, ஏற்பட்டகூட்டுறவு, நேசத்தை ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை. வெற்றி கிடைத்ததோ, யாருடைய வல்லமை, வெற்றிக்கு முக்கிய காரணம் என்ற பேச்சும், போரிலே, யார், அதிகக் கஷ்ட நஷ்டமடைந்தார்கள் என்பதுபற்றிய விவாதமும், பலப்பட்டதே தவிர, ஆபத்துவேளையில் அமைந்த இந்தக் கூட்டுறவை, நிரந்தர நேசமாக்குவதற்கு என்ன வழி காணலாம், என்ற எண்ணம் வலுவடையவில்லை.

“இவ்வளவு வீரதீரமும், போர்த்திறனும், புதுமையான போர்க் கருவிகளும், சோவியத்திடம் இருக்கக்கூடுமென்று நாம் கனவுகூடக் காணவில்லையே. இப்போதல்லவா தெரிகிறது, சோவியத்தின் படைபலமும், அங்குள்ள மக்களின் நெஞ்சு உரமும்” என்று எண்ணத் தொடங்கிய அமெரிக்கா, இப்படிப்பட்ட பலவான், தன் கூட்டாளியானானே என்று மகிழ்ச்சி கொண்டதா என்றால், இல்லை; மருட்சியே கொள்ளலாயிற்று; இவ்வளவு வல்லமை பொருந்திய சோவியத், நாஜியுடன் போரிட நேரிட்டதற்குப் பதிலாக, நம்மைத் தாக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருந்தால், நமது கதி என்னவாகியிருக்கும்?—என்று யோசிக்கத் தொடங்கியதுடன், பொறாமையைக்கூட வளர்த்துக் கொண்டது. அசூயை அச்சத்தையும் பிறக்கச் செய்தது. எனவே, சோவியத்தின் சக்தியையும் சமாளிக்கக்கூடிய பலத்தை நாம் பெற்றாகவேண்டும் என்று திட்டமிட்டு அமெரிக்கா வேலையைத் தொடங்கி, இன்றளவும், அதிலேயே தன் ஆற்றலை அவ்வளவையும் காட்டிக் கொண்டு வருகிறது. அதிலும், போரின் விளைவாக ஏற்பட்ட நாசத்திலிருந்து, மற்ற நாடுகளைவிட, மிக விரைவாக, சோவியத் விடுபட்டு, பழைய சோபிதத்தையும் அடைகிறது என்பதைக் கண்டதும் அசூயை ஆத்திரமாக மாறிவிட்டது.

அது போலவே, சோவியத்தும், ஒரே முகாமில் தங்கி, அமெரிக்காவுக்கு உள்ள அபாரமான பணபலத்தையும், அதனால் பெறமுடிந்த படைபலத்தையும், தெரிந்துகொண்டதால, உலக நிகழ்ச்சிகளை, பாதிக்கக்கூடிய, பலம், அமெரிக்கா பெற்றிருப்பதை அறிந்துகொண்டு அதற்கு ஏற்றபடி, தன் திட்டத்தைத் தயாரிக்கத் தொடங்கிற்று.

இவ்விரு சக்திகளும், சந்திக்க முடியாதபடியும், சந்திக்கவேண்டிய நிலைமை ஏற்படாதபடியும், இடையே இருந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்யசக்தி, எல்லைக்கல் போலிருந்து வந்தது. இந்தப்போர், பிரிட்டிஷ ஏகாதிபத்யத்தின் பலமெல்லாம், பூஜாரியின் உடுக்கையின்போது, ஆவேசமாடுபவனுக்கு ஏற்படும் வலிவுபோன்ற முறையானதே தவிர, உண்மையான பலம் இல்லை, என்பதை இருசக்திகளுக்கும் எடுத்துக் காட்டிவிட்டது. அந்த இருசக்திகளுக்கும், இந்த உண்மை தெரிந்ததைவிட, அதிகம் தெளிவாக, பிரிட்டனுக்கே இது புரிந்துவிட்டது. நஷ்டஈடுத் தொகையைஎதிர்பார்த்துக்கொண்டு, யானை படுத்தால் குதிரை மட்டம், கடுகுசிறுத்தாலும் காரம் போகாது என்றெல்லாம் பழமொழி பேசிக் கொண்டு மகிழ்ச்சியைத் துணைக்கு அழைக்கும், நாட்டு, ஜெமீன்தார் நிலைக்கு, பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் வந்துவிட்டது எனவே, சோவியத்தும், அமெரிக்காவும் சந்திக்காதபடி, வழி மறைத்திருந்த வல்லரசு விலகி விட்டது.

எனவே, இப்போது, இந்த இரு சக்திகளும், நேருக்கு நேர் நிற்கின்றன. நேசமாக வாழ்வதா, பூசலிட்டுக்கொள்வதா—என்ற பிரச்னை, மன்றத்திலே தோன்றுமளவுக்கு, இருசக்திகளும் நெருங்கிஉள்ளன.

இருசக்திகளுக்கும் உள்ள ராஜதந்திரத்திறமைக்கு,பரீட்சைக்கூடம் போல அமைந்துவிட்டது, சாந்தியை நிலவச்செய்வதற்கு என்று அமைக்கப்பட்ட ஐக்ய நாடுகள் சபை.

ஜெர்மனிக்குள்ளாகவேகூட, இரு முகாமகள்! இரு வேறுதிட்டங்கள்! இருவிதமான பிரசாரங்கள்!

ஜெர்மன் நிபுணர்களைக்கொண்டு சோவியத், பயங்கரமான இரகசிய ஆயுதங்களை உற்பத்திசெய்யும் முறையைக் கற்றுக்கொள்கிறது, என்று அணுகுண்டு அமெரிக்கா, புகார் செய்கிறது.

அதிலே, என்ன தவறு? என்று கூறுகிற முறையிலே, கொட்டும் குளிரில, போரிடும் முறையை எமக்குக் கற்றுக்கொடுமகள், நீங்கள் அந்த ‘வித்தை’யை, குளிர்காலத்திலே ரஷியாவிலே, போர்நடத்தித் தெரிந்து கொண்டவர்களாயிற்றே, என்று பிரிட்டிஷ் படைத்தலைவர்கள் சரண்புகுந்த ஜெர்மன்படை நிபுணர்களைக் கேட்கிறார்கள்—பயிற்சியும் பெறுகிறார்கள்.

எமது ஆதீனத்தின் கீழ் இருந்தால சாந்திஉண்டு, சுபீட்சம் உண்டு, என்று சோவியத், தன் அண்டை நாடுகளுக்குக் கூறுகிறது. இந்தபுன்

பழைப்பை ஏற்கமறுத்தால் மல்லுக்கும் இழுக்கிறது.

எமது ஆதீனம் என்றுகூட அமெரிக்கா முதலில் கூறவில்லை. உங்களுக்குள் ஓர் பொது அமைப்பு ஏற்படுத்திக் கொள்வது நல்லது; நீங்கள் நேசத்தோடு வாழுவதைக் காணவேண்டுமென்பதே எமது நோக்கம், இந்தச் சிறந்த காரியத்தைச் சாதிக்க எம்மாலான உதவியைச் செய்கிறோம் — பணம், பண்டம், படை, என்ன வேண்டுமோ, வெட்கப்படாமல் கேளுங்கள் தருகிறோம், என்று பேசலாயிற்று.

ஐரோப்பாவின் மேற்குத் திக்கிலிருந்து அமெரிக்க அன்பும் கிழக்குத் திக்கிலிருந்து, சோவியத் உபதேசமும், கிளம்பி, ஒவ்வொரு நாடாக நுழைந்து, ஆங்காங்கு ஒவ்வோர் விதமான நிலைமையை உண்டாக்கி வரலாயிற்று.

மந்திரிசபை மாறுதலிலிருந்து, மன்னர்கள் முடி துறப்பது வரையிலே, அரசியல் துறவிலிருந்து, அநியாயக் கொலைகள் வரையிலே, பல்வேறு நிகழ்ச்சிகள், ஐரோப்பாவிலே உள்ள பலநாடுகளில.

போலந்து, பின்லந்து, செக்கோ, யுகோ, போன்ற நாடுகள், சோவியத்தின் பதுமைகள், என்று அமெரிக்கா கூறவும், கிரீசிலிருந்து துவங்கி, பிரிட்டன் வரையிலே உள்ள நாடுகள், அமெரிக்காவின் கங்காணிகள் என்று சோவியத் கூறவும், நிலைமை இன்று இருக்கிறது.

இந்தச்சீர்கேடு, ஐரோப்பாவுடன் நின்றுவிடவில்லை. சீனாவிலே, ராஜதந்திர முழக்கம் என்ற அளவிலிருந்து, பீரங்கி முழக்கமெனும் அளவுக்கு, நிலைமை கேவலமாகிவிட்டது.

அமெரிக்காவுக்கு, ஐரோப்பிய கண்டத்திலே, பிரிட்டன் ஏஜண்ட் வேலை செய்கிறது — கணக்குளி, கோயாளி, அமரிக்காவுக்குப் பங்காளி, இந்த பிரிட்டன். எனவே இந்தவேலையைக் கூச்சமின்றிச் செய்கிறது, என்று சோவியத் புகார் கூற, அதை மறுப்பது வீண்வேலை என்ற கருத்துடன், பிரிட்டன் ஆங்கிலோ — அமெரிக்கக் கூட்டுறவு, மேற்கு ஐரோப்பிய நாடுகளின் தோழமை, பொது உடைமை எதிர்ப்பு முன்னணி, புனரமைப்புப் பொது முயற்சி, என்ற பல்வேறு பெயர்களைக் கூறிக்கொண்டு, இருசக்திகள் மோதிக்கொள்வதால், அமெரிக்காவின் சார்பாகத்தான் பிரிட்டன இருக்கும் என்பதை, விளக்கமாக்கிக் கொண்டு வருகிறது.

சின்னாட்களுக்கு முன்பு, செக்கோஸ்லோவேகியாவில், அரசாள்வோர் அகற்றப்பட்டு, பொதுஉடைமைக் கட்சியினர் ஆதிக்கம் பெற்றுவிட்டனர். வேறுகட்சி தலைகாட்டக் கூடாது என்று திட்டமிட்டு, வேலை செய்கின்றனர். செக்கோவில் நடைபெற்ற இந்தச் சம்பவம், சோவியத்தின் சதிச்செயல், என்று, பகிரங்கமாகவே, குற்றம் சாட்டலாயினர். சோவியத், இதனைப் பலமாக மறுக்கிறது.

இது இன்றுள்ள சூழ்நிலை, எனவேதான், போர் மூண்டுவிடக் கூடும் என்ற அச்சம் தோன்றியிருக்கிறது.

இந்தச் சூழ்நிலையிலே, இந்திய துணைக்கண்டத்தின் போக்கு, எவ்விதம் இருக்கவேண்டும், என்பதை, ஆளவந்தார்கள் தீர்மானிக்க வேண்டு — அந்தத் தீர்மானம், பொதுமக்களின் கருத்தை ஒட்டியதாக இருத்தல் வேண்டும். பொதுமக்கள், இந்தப் பிரச்னைபற்றி தங்கள் கருத்தைத் தெளிவுபடுத்திக் கொள்வதுடன் ஆளவந்தார்களுக்கும் தெரிவிக்கவேண்டும். எதிர்காலம், எப்படி அமையும் என்பது, இந்தப் பிரச்னையைப் பொறுத்திருக்கிறது.

# திராவிடர் கழக

## மாகாண மாநாடு

## தூத்துக்குடியில்

## மே, 1, 2 தேதிகளில்

### நடைபெற

ஏற்பாடாகிவருகிறது.

முதலமைச்சர், இந்தியா, எந்தச் சக்திக்கும், சாமர வீசச் சம்மதிக்காது, என்று கூறுகிறார். மகிழ்ச்சி. ஆனால் பிரிட்டிஷ், அமெரிக்கக் கூட்டுறவைத்தான் இந்தியா பெரிதும் விரும்புகிறது என்பதைப், பல நடவடிக்கைகள் மெய்ப்பிக்கின்றன.

போர்வந்துவிடுமானால், எக்காரணத்தால் என்பதையும், விளைவுகள் என்ன ஆகும் என்பதையும், பொதுமக்கள் சீர்தூக்கிப்பார்த்தால், ஆதிக்கம் தேடி அலையும் இரு சக்திகளில், எந்தச் சக்திக்கும், நாம் உதவி செய்யவோ, உடனிருக்கவோ கூடாது, ஒதுங்கியே நிற்கவேண்டும், என்பதை உணருவர். பொதுமக்கள் இந்தக்கருத்தை தெளிவுபடுத்தியாக வேண்டும் — பல்வேறு கட்சிகளும், மக்கள் மன்றங்களும், இந்த மகத்தான பிரச்னைபற்றி, பொறுப்புணர்ச்சியுடன் யோசித்து, யோசித்து, தங்கள் கருத்தை, ஆள்பவர்களுக்கு அறிவிக்க வேண்டுகிறோம்.

'ஜலஉஷா'வைச் சின்னாட்களுக்கு முன்புதான், கடலில் செலுத்தினர். இந்த நிலையில் உள்ள, துணைக்கண்டம், பயங்கரப்போரிலே, ஒதுங்கி இருந்தால் மட்டுமே, தனது நிலையை காத்துக்கொள்ள முடியும். புயலுக்கு முன்பு, புயல் வருமோ என்ற சந்தேகம் எழும்போதே, துறைமுகம் சேர்ந்து நங்கூரம் பாய்ச்சிக் கொள்வது கலத்துக்கு நல்லது; நாட்டுக்கும்தான்!

★

12-ம் பக்கத் தொடர்ச்சி

சுவரையைக் காட்டுகிறார்! என்று தலைப்பு வரும். வாலை நீட்டாதே— என்று தலைப்புகள் வரும். சோஷலிஸ்டுகள் சோகம் என்று பாடல் வரும். மலையிடம் மோதுகிறார், என்று படம் வரும். சமதர்மிகள், இவ்வளவு கணையும் சமாளித்தாக வேண்டும் — பலர், இதிலே கருகிவிடுகிறார்கள், என்பதை நினைவிற் கொண்டு, நின்றால் மட்டுமே, சோஷியலிஸ்டுகள், கருதுகிறபடி, காங்கிரசின் போக்கால், பொதுமக்களின் நலனும் உரிமையும் கெட்டுவிடாதபடியான பாதுகாப்பை ஏற்படுத்த முடியும். வெறும் கண்டனமும், ஒப்புக்கு ஒரு எதிர்க்கட்சியும், ஏற்படுத்துவது, சுலபம்; ஆனால் பலன் தராது. இதோ செட்டி நாட்டுக் குமாரராஜா, இப்போது ஓர் எதிர்க்கட்சித் தலைவராகக் காட்சி தருகிறார்! அதுபோல், கோலம் கொள்வது சுலபம். ஆனால், அந்த நிலையையா, சமதர்மிகள் ஒப்புவர்? சோஷியலிஸ்டுகளின், எதிர்கால நடவடிக்கைதான், இதற்குப் பதில் கூறவேண்டும்.

# கல்கத்தா கனவானின் திட்டம்

7-ம் பக்கத் தொடர்ச்சி

பார்க்கட்டும். அங்கு சென்று, சமதர்மிகள், தங்களுடைய 'அருமை' யான திட்டத்தையும் கொள்கையையும், நடைமுறைக்குக் கொண்டுவந்துபார்க்க, சர்க்கார், சமதர்மிகளுக்கு முழுவசதியும் அளிக்கட்டும். அங்கு முதலாளிகள் இல்லை சுரண்ட. அங்கு சென்று சமதர்மிகள் தங்கள் திட்டத்தை நடத்தி வெற்றிகிடைத்தால், அதைப்பார்த்தபிறகு இந்தியா, நல்லது கெட்டது, புரிந்து கொள்ள முடியும்.

இவை. அந்தமுதலாளி டிரைவர், பேசியதில் உள்ள மணிவாசகங்கள்.

முதலாளித்வ முறையைக் குலைக்காதே.

சமதர்மப் பரீட்சையை இங்கு நடத்தாதே.

திட்டமாகக்கூறுகிறார் இந்தத்திவ்விய புருஷர்.

இருபது வருஷகாலம் இவர்களின் ஆதிக்கம் ஆடாமல் அசையாமல் இருக்க வேண்டும், அதேபோது இங்கு, எந்தச்சமதர்மத்திட்டப் பரீட்சையும் நடைபெறக் கூடாது.

சீமான்கள் இந்தியாவில்! சமதர்மிகள், அந்தமானில்! இந்த 'சத்காரியத்தை' முறையாகச்செய்துமுடிக்க, டில்லியில் நேரு இருக்கவேண்டும்! இது, இவருடைய, எண்ணம்!

இனி, தனிஒருவனுக்கு உணவில்லை எனில் ஜெகத்தினை அழித்திடுவோம், எலலோரும் இந்நாட்டு மன்னர், எல்லோர்க்கும் எல்லாம் உள்ளநிலைவேண்டும், என்பன போன்ற இலட்சியவாசகங்கள் இங்கு ஏன் அனுமதிக்கப்படவேண்டு!! மக்கள் தங்கள் வாழ்விலே, ஏதோ ஒரு மகத்தான மாறுதல் ஏற்படவழி பிறந்திருக்கிறது என்று ஏன், வீணாக நம்பிக் கொண்டிருக்க வேண்டும். இலட்சிய வாதிகள், அந்தமானுக்கு, இலாபவேட்டைக்காரர்கள் இந்தியாவுக்கு!—எப்படிப் பட்ட அற்புதமான யோசனையை அருளியிருக்கிறார். இவ்வளவுக்கும் காரணம் என்ன?

நாடாள முன்வந்த காங்கிரஸ், முதலாளித்துவத்தின் பலத்தை அதிகமாக மதிப்பிட்டுவிட்டு, மருண்டுவிட்டிருக்கிறது. காங்கிரசிலேயே, இடம்பிடித்துக் கொண்டனர் முதலாளிகள். அவர்களின் ஒத்துழைப்பும் நேசமும் இருந்தாலொழிய நாட்டுக்குக் கிடைத்துள்ள சுபாட்சியைக் காப்பாற்றிக் கொள்ள முடியாது என்ற கிலி கொண்டு விட்டனர், ஆட்சியாளர்கள். எனவேதான், முதலாளித்வத்தை, எதிர்ப்பதோ, அதன் மனம் கோணும்படி நடந்து கொள்வதோ, கூடாது, என்று எண்ணி, முதலாளித்வத்தின் சந்தேகத்தையும், பயத்தையும், சஞ்சலத்தையும் சோகத்தையும் போக்க, காங்கிரஸ் தலைவர்கள் முன்வந்தனர்.

திடீரென்று முறையை மாற்றி விடமாட்டோம்.

பெரும் பொருள் போட்டு தொழில் நடத்துபவர்கள், தங்கள் நிலை திடீரெனக் குலைந்துவிடுமோ என்று பயப்படவேண்டாம்.

இப்போது உள்ள தனிப்பட்டவர்களின் தொழில்களைச் சர்க்கார், எடுத்துக்கொண்டு நடத்த முற்படாது.

சில குறிப்பிட்ட, புதுத் தொழில்களைச் சர்க்கார் நடத்தும்.

சர்க்காரின் நோக்கமெல்லாம், பொருள் உற்பத்தி அதிகமாக வேண்டும் என்பதுதான்.

இதற்கு முதலாளித்வ முறை பயன்படுமானால், சர்க்கார் வீணாக, அதிலே தலையிடாது.

இவ்விதமாகவெல்லாம் காங்கிரசின் பெருந்தலைவர்கள் பேசியபடி உள்ளனர்.

சிற்றரசர்களைக்கூட, தந்திமூலம், விலகச் செய்ய முடிந்தது, டாட்டா பிர்லா போன்ற சீமான்களிடமோ, அச்சமும் அன்பும் கூட்டிக் கலந்து பேசத்தான் முடிகிறது. அந்த அளவுக்குப பாசமும் பயமும் இருக்கிறது, பொருளாதாரத் துறையிலே ஆதிக்கம் பெற்றுள்ளவர்களிடம். துவக்கத்திலேயே, குட்டியாக இருக்கும்போதே, இந்த அளவு அச்சத்தை உண்டாக்க முடிகிறது என்றால், இருபது வருஷம் ஆதிக்க உரிமை கேட்கிறாரே, டிரைவர், அதுபோல கிடைத்து வளர்ச்சி ஏற்பட்டால், குட்டி, வேங்கையானல், அச்சம் எந்த அளவுக்கு வளர்ந்துவிடும் என்பதை அறிவுடையோர் யாருமே, எண்ணிப்பார்க்க மாட்டார்கள்! எண்ணிப்பார்க்க மாட்டார்கள் என்ற தைரியத்திலேதான், பேசியிருக்கிறார், கல்கத்தா கனவான்—20 வருஷக் குத்தகை கேட்கிறார், இரத்தமும் கண்ணீரும் வியர்வையும் கொட்டி, விடுவித்த இந்திய துணைக் கண்டத்தை!! குத்தகைக்கு விட்டு விடவும், கொள்ளை இலாபக்காரர்களின் கொட்டம் வளரவும், தீவிரக் கொள்கை, இலட்சியம் என்று பேசத் துணிபவர்களை, அந்தமான் துரத்தவும், சம்மதிக்கிறீர்களா? இந்த நிலையைப் பெறுவதற்குத் தானா, வீர சுதந்திரம் பெற்றது—வேண்டி அல்ல, போரிட்டு!! முற்போக்குக் கொள்கையும், சமதர்ம இலட்சியமும், கொண்டவர்கள் அனைவரும், மிக மிகக் கண்காணிப்பாக இருக்க வேண்டிய காலம் வந்துவிட்டது இலட்சியங்கள் கேலிக்குரியனவாகிவிட்டன! சமதர்மம், ஏட்டுச் சுரைக்காய்! அந்தத் தத்துவத்தின்படி நாட்டைத் திருத்தி அமைக்கவேண்டும், என்று எண்ணுபவர்கள், கனவுலகில் சஞ்சரிப்பவர்களாம்! சீமான்களுக்கு இந்தியா, சமதர்மிகளுக்கு அந்தமான்! என்று, பேச்சு எழும்பிவிட்டது. அது செயலளவாக வளருவதற்குள்ளாவது தீவிர வாதிகள் ஒன்றுபட வேண்டும்—முயற்சிப்பரா?

கொடிய நஞ்சுடைய பாம்பு! துடியிடையுடைய ஓர் பாவை!! அந்தப் பாவை, அந்தப் பாம்பினைக் கழுத்திலே, 'ஆரம்' போலத் தொங்க விட்டுக் கொண்டு, 'நடனம்' ஆடுவாள் — ஆயிரக்கணக்கானவர்கள், இக்காட்சியினைக்கண்டு, ஆனந்த ஆரவாரம் செய்வரார். இந்த நடனம், வழக்கமாக நடைபெற்று வந்தது, ஒரு சர்க்கசில். ஒரு நாள், பாம்புக்குப் பாசம் அதிகமாகி விட்டது. உடனே, மங்கையின் உடல் மீது மாலை போல் புரண்டு கொண்டிருந்த பாம்பு, மங்கையைத் தழுவலாயிற்று. இறுகத் தழுவவே அவள், வலி தாங்காது அலறினாள், பாம்பை எடுத்தெறிய முயற்சித்தாள்; முடியவில்லை, பாம்பு அவள் உடலோடு ஒட்டிக்கொண்டது போலாகிவிட்டது. இறுதியில் பாம்பு, அந்தப் பாவையின உடலைத் தன் தழுவுதலாலேயே, முறித்து, அவளைக்

# சண்முகப்பிரியா—பயனற்றபண்

கொன்றேவிட்டது. புராணமல்ல—பொழுது போக்குக் கதையுமல்ல—உண்மை நிகழ்ச்சி-சின்னாட்களுக்கு முன்பு, பத்திரிகைகளில் வெளிவந்த செய்தி. மேனாட்டிலே உள்ள ஒரு சர்க்கஸ் கம்பெனியில் நடைபெற்றதாம், இந்தச் சம்பவம்.

* * *

இந்திய துணைக்கண்டத்தை ஆளும் வாய்ப்பு, அதன் விடுதலைக்குப் பன்னெடுங்காலம் பணி புரிந்த ஸ்தாபனம், என்ற முறையிலே காங்கிரசுக்குக் கிடைத்தது. ஆளவந்தவர்கள், நாட்டு மக்களுக்கு, நஞ்சுடை நாகத்தைக் கழுத்திலே மாலை போல அணிந்துகொண்டு நாட்டியமாடிக் காட்டிய நங்கைபோல, முதலாளித்வ முறையைத் தூக்கி மாலையாகப் போட்டுக் கொண்டு, ஆட்டம் ஆடிக் காட்டுகிறார்கள். பலர், இந்த அபூர்வ நடனத்தைப் பாராட்டவும் செய்கிறார்கள்.

“எவ்வளவு தைரியம் அந்தப் பெண்ணுக்கு?”

“பாம்பு என்றால் படையும் நடுங்குமே! இந்தப் பாவைக்கு பயம் இல்லையே!”

“பாம்பு, ஏதாவது சேஷ்டை செய்தால், பாவை அதைக்கொன்று விடுவாள். அவள் அவ்வளவு சாமர்த்தியசாலி”

“ஒருவேளையைப் போல இராது—ஏன் இந்த விபரீத விளையாட்டு, பாம்பை ஏன மாலையாகப் போட்டுக் கொள்ளவேண்டும். ஆபத்தை அணைத்துக் கொள்வதிலே, அறிவுடைமை என்ன இருக்கிறது”

இவ்விதம், பலர், பலவிதமாக, பாம்பணிந்து நடனமாடிய பாவையைக் கண்டு பேசியிருந்திருப்பார்களல்லவா. அதுபோலவே இப்போது முதலாளித்வ முறையைத் தூக்கி வைத்துக் கொண்டு ஆடும், காங்கிரஸ் ஆட்சியின் போக்கைப் பற்றியும் பலர், பலவிதமாகப் பேசுகிறார்கள். கல்கத்தா கனவானின் பேச்சைக் கருத்தூன்றிக் கவனிப்பவர்கள், இன்று காங்கிரஸ் கையாளும் போக்கு நீடிக்குமானால், சர்ப்பத்தால் சாகடிக்கப்பட்ட சர்க்கஸ் பெண்ணின நிலைமைதான், நாட்டு நலனுக்கு ஏற்படும், என்பதை உணர்ந்து கொள்வர். முதலாளித்வத்தை, அந்தக் கனவான் கோருகிறபடி, 20 வருஷ காலம், கட்டிவளர்த்துக் கொண்டிருந்துவிட்டு, அதே நேரத்தில், சமதர்மிகளையும் அந்தமானுக்குத் துரத்திவிட்டு, நாட்டை ஆளும் நாயகர்கள், என்ன பலனை மக்களுக்குத் தர எண்ணுகிறார்கள்!

ஓ! இது தெரியாதா உனக்கு. பொருள் உற்பத்தி பெருகும் அது தான் சர்க்காரின் நோக்கம். முதலாளித்வ முறையினால்தான் அது முடியும். அதனால்தான், சர்க்கார் சில காலம் வரையில், சமதர்மத்தை அமுலுக்குக் கொண்டு வராமல், முதலாளித்வத்துக்கே அனுமதி தருகிறது. நிதி மந்திரி சண்முகம் கூட, தொழில் வளரவேண்டுமானால், பலருக்குத் தொழிலில் பணம் போடும் எண்ணம் வளரவேண்டும், அந்த எண்ணம் வளரவேண்டுமானால், தொழிலால் இலாபம் பெறலாம் என்ற ஆசை அவர்களுக்கு ஏற்படவேண்டும், அந்த ஆசை பிறக்க வேண்டுமானால், இலாபநோக்கத்தை நாம் குறை கூறாமலிருக்க வேண்டும், அப்படியானால், முதலாளித்வத்தைக் குறை கூறாதிருக்க வேண்டும்,—என்று கூறியிருக்கிறாரே — என்று கூறுவர் சில நண்பர்கள்—ஏதாவது கூறிப்பார்ப்போம் என்ற நோக்கத்துடன்.

சமதர்மத் திட்டத்தால் பொருள் உற்பத்தி பெருகாது என்று இவர்கள், என்ன ஆதாரத்தின்மீது, எங்கு பரீட்சை நடத்திவிட்டு, எந்த அந்தமானுக்குப் போய்வந்து கூறுகிறார்கள்? ஒன்றுமில்லை. இருக்கும் ஆதிக்கம் கெடாதிருக்கும், பாதுகாப்புக்கான பசப்பும் பேச்சு அது.

சமதர்மத் திட்டத்தால் பொருள் உற்பத்தி குறையும், என்பது ஆதாரமற்றது, அதுபோலவே, முதலாளித்வ முறையினாலே பொருள் உற்பத்தி பெருகிவிட்டது, என்ற பேச்சும் ஆதாரமற்றது. சோவியத்தில், சமதர்மம் மட்டுமல்ல, பூரண பொது உடைமையே இருக்கிறது, அந்த நாடு, வேறெந்த நாட்டினிடமும் சென்று, பிச்சை எடுப்பதாகவோ, இரவல் கேட்பதாகவோ, தகவல் உண்டா?

பொருள் உற்பத்தியினாலேயே, பொதுமக்களின் நலன், அதிகரித்துவிடும், என்பதாவது, ஆதாரமானது தானா? அதிலும், முதலாளித்வ முறைப்படி பொருள் உற்பத்தி, வளருகிறது என்றால், பொதுமக்களின் நலனா முன்னணியிலிருக்கும்—சண்முகம் கூறுவது போல, இலாப நோக்கந்தானே இருக்கும். வெண்ணெய் உற்பத்தி செய்தால், பத்தாயிரம் இலாபமும், சுண்ணாம்பு உற்பத்தி செய்தால், இருபதாயிரம் இலாபமும் கிடைக்குமென்றால், உடனே, முதலாளியின் வியாபாரமே, உற்பத்தியே மாறிவிடுமே.

உயர்தரமான வெண்ணெய்—என்ற போர்டு மாறி, உயர்தரமான வெண்ணெய் போன்ற நிறமுள்ள சுண்ணாம்பு, என்று புதுப்போர்டு தானே, எழுதிவிடுவார்கள் யார் அறியார்கள் இதனை? எவ்வளவு சுலபத்திலே மக்களை ஏமாற்றிவிட முடியும் என்ற எண்ணத்திலே இவர்கள் பேசுகிறார்கள் என்பதை எண்ணும்போது கோபத்துடன் சேர்ந்து சிரிப்பும் வருகிறது. இவ்வளவும் ஒருபுறமிருக்க, இவர்கள் கூறும், பொருள் உற்பத்தி, மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வது, ஆகியவைகளைப்பற்றி, இந்தியாவை இருபது ஆண்டுகளுக்குக் குத்தகை எடுக்க விரும்பும், கல்கத்தா கனவான், அதே சொற்பொழிவிலே என்ன கூறியிருக்கிறார் என்பதையாவது இவர்கள் கவனித்தார்களா?

* * *

இப்போதும் சரி, எதிர்காலத்திலும் சரி, மக்களின் வாழ்க்கைத் தரம், உயர்வது முடியாத காரியம். பொருள் உற்பத்தியாவது, ஜனத்தொகை வளருகிற அளவுக்கு ஏற்ற அளவு, அதிகரிக்கும் என்றோ, ஜனத்தொகை வளருகிற அளவுக்கு செல்வமும் பெருகுமென்றோ, விஷயமறிந்த யாரும் எண்ணுவதற்கில்லை. இப்போதைக்கு, வாழ்க்கைத்தரம் உயருவது இருக்கட்டும், கோடிக்கணக்கான மக்களுக்கு, மூன்றுவேளையும் உண்ண உணவு கிடைக்கச் செய்வது என்று மட்டுந்தான் பொருள் கொள்ள முடியும். இப்போது அவர்களுக்கு, ஒருவேளை, இருவேளை உணவு கிடைப்பதும், நிச்சயம் என்ற நிலை இல்லை. இந்த நிலை மாற

லா, வாழ்க்கைத்தரம் உயர்வதால். இதன் பயனாக, ஜனத்தொகை மேலும் அதிகரிக்க வழிபிறக்குமே தவிர, குறையாது.”

இது, கல்கத்தா கனவானின், கருத்து. திருப்திதானா?

சோறுஉண்டு—உழைக்க ஆட்கள் வேண்டும்.

ஜனத்தொகை அனாவசியமாக, அதிகமாக, வளர்ந்து கொண்டே போகக்கூடாது அவ்விதம் வளர்ந்தால்,கூடவே, தொல்லையும் வளரும்.

வேலை செய்யும் ஆட்களிடம் இலட்சியப்பேசும், ஆசாமிகளை உலவ விடக்கூடாது. அவர்களை அந்த மானுக்குத் துரத்தவேண்டும்.

சர்க்காரும், வரி, கட்டுத் திட்டம், என்ற தளைகள் போடக்கூடாது, முதலாளித்வத்துக்கு.

இவ்விதம் ஒரு இருபது ஆண்டுக் காலத்துக்கு இந்தியாவைக் குத்தகைக்கு எடுத்துக்கொள்ள, ‘ஏதோ பெரிய மனதுவைத்து’ இணங்கி இருக்கிறார், கல்கத்தா கனவான்! ஜெய்ஹிந்த், இன்குலாப் ஜிந்தாபாத்!!

✻

# கண்டனம்............பிறகு?

—✻—

கம்யூனிஸ்டு கட்சியினர் மாநாட்டிலேயும், சோஷியலிஸ்டுகள் மாநாட்டிலேயும், இன்றைய காங்கிரசின் அமைப்பு, போக்கு, திட்டம் அனைத்தும், கண்டிக்கப்பட்டன.

காங்கிரசின் ஆட்சிமுறையும், கண்டிக்கப்பட்டிருக்கிறது. பொதுநலனை மறந்துவிட்டனர், ஏழையைக் கைவிட்டு விட்டனர், முதலாளிகளின் கூட்டுறவில் உள்ளனர், எதேச்சாதிகார முறையிலே நடந்து கொள்கின்றனர், என்பவை, இந்த இரு ஸ்தாபனங்களும், காங்கிரஸ் மீது கூறும் குற்றச் சாட்டுகளிலே முக்கியமானவையாகும்.

சோஷியலிஸ்டுகள், இனிக் காங்கிரசில் சேர்ந்திருப்பது, நாட்டுக்கே, கேடு செய்வதாகும் என்று கூறி விட்டதுடன், காங்கிரசிலிருந்து விலகி, பொதுமக்களின் நலனையும் உரிமையையும் பாதுகாக்கும் பொறுப்பைக் கொண்ட எதிர்க் கட்சியாக இனிப் பணியாற்றுவது என்று தீர்மானித்துள்ளனர்.

கம்யூனிஸ்டுகளின் கண்டனத்தைக் காங்கிரஸ் தலைவர்கள், தந்திரமாக, பயனற்றதாக்கி விட்டனர்—கம்யூனிஸ்டுகள் மாஸ்கோவின் கையாட்கள் என்று பழி சுமத்தி.

அதே முறையிலே சோஷியலிஸ்டுகளையும் ஒழித்துவிட முடியாது—ஏனெனில், இவர்கள், மாஸ்கோவிடம் தொடர்பு கொண்டவர்களல்ல—தொடர்புள்ளதாகக் கூறப்படும் கம்யூனிஸ்டுகளுக்கு வைரிகள்.

காங்கிரஸ் நடத்திய ஆகஸ்ட்டு இயக்கத்தின்போது, கம்யூனிஸ்டுகள், அதிலே கலந்து கொள்ளவில்லை, காட்டிக் கொடுத்துவிட்டார்கள், என்று கூறிக் கம்யூனிஸ்டுகள் மீது, எதிர்ப்புணர்ச்சியைக் கிளப்பிவிட முடிந்தது.

சோஷியலிஸ்டுகளோ, ஆகஸ்டு இயக்கத்திலே கலந்துகொண்டவர்கள் மட்டுமல்ல, அந்த இயக்கத்திலே, மிக மிகத் தீரச் செயல்களைப் புரிந்தவர்கள். எனவே அவர்கள் மீது, ‘ஆகஸ்டுக் குற்றம்’ சுமத்திவிடவும் இயலாது.

தியாகம், வீரம், விவேகம், ஆகிய பண்புகளும், பொது மக்களிடம் நெருங்கிய தொடர்பும் கொண்டவர்களாக விளங்கும் பலர், சோஷியலிஸ்டுக் கட்சியிலே உள்ளனர். ஜெயப்பிரகாஸ், கமலாதேவி, லோஹியா, அருணா ஆசப் அலி, போன்றவர்கள் பலபிரபல காங்கிரஸ் தலைவர்கள் அடைந்துள்ள கஷ்ட நஷ்டங்களை விடச்சற்று அதிகமாகவே இன்னல்களை அடைந்தவர்கள்—இலட்சியவாதிகள், எனவே, அவர்களின் ‘கண்டனம்’ காங்கிரஸ் தலைவர்களால், உதாசீனப்படுத்திவிடக்கூடியதல்ல. அவ்விதம் அவர்கள் உதாசீனபடுத்துவதானாலும், பொதுமக்கள், சோஷியலிஸ்டுகளின் கண்டனத்தைஉதாசீனப்படுத்திவிடமாட்டார்கள். காங்கிரசிலே இருந்து, பணியாற்றிய இரண்டு தீவிர அமைப்புகள், இன்று காங்கிரசின் போக்கைக் கண்டிக்கும் அளவு, நிலைமை இருக்கிறது. சோஷியலிஸ்டுகள், இவ்விதம் கண்டனத்தை வெளியிட்டுவிட்டு, காங்கிரசை விட்டு வெளியேறி அதன் விளைவாகக் காங்கிரசின் எதிர்ப்பு ஏற்படினும் சமாளிப்பது என்ற நிலையை மேற்கொள்ளாமல், காங்கிரசுக்குள்ளேயே, கட்டுக்கடங்கி இருப்பது என்று இணங்கினால், சோஷியலிஸ்டுத் தலைவர்களிலே சிலருக்கு மந்திரிப் பதவி கலபத்திலே கிடைக்கமுடியும். அமெரிக்காவுக்குத் தூதுவராகச் சென்றுள்ள ஆசப் அலியின் துணைவியார், அருணா ஆசப் அலி, சோஷியலிஸ்டுக் கட்சியில் சேராமல், கணவனுரைப் போலக் காங்கிரசிலேயே இருப்பது என்று தீர்மானித்தால், விஜயலட்சுமி அம்மையார் போல ஓர் பதவியைப் பெறுவது, எளிதான காரியம், என்பதை யார் மறுக்க முடியும்.

“ஒரு ஜில்லாவையே இவர்களிடம் ஒப்படைக்கக்கூட நான் சம்மதித்தேன்.” என்று படேல், ஒருமுறை கூறினார், சோஷியலிஸ்டுகளைப் பற்றிக் குறிப்பிடும்போது. அவருடைய பேச்சிலிருந்தே, சோஷியலிஸ்டுகளுக்கு எந்த அளவு செல்வாக்கு உண்டு, என்பது தெரிகிறது இருந்தும், ஜெயப்பிரகாஸ் நாராயண் போன்றவர்கள், காங்கிரசின கூட்டுறவை அறுத்துக்கொள்ளத் தீர்மானிததுள்ளனர் என்றால், வெறும் பதவி பெறுவதை அவர்கள் மதிக்க மறுக்கிறார்கள் என்றதானே பொருள்!

எனவே, சோஷியலிஸ்டுகள், காங்கிரஸ் காட்டிய தியாகத் தீயிலே குதித்தவர்கள், ஆகஸ்ட்டிலே ஆற்றலுடன் கலந்துகொண்டவர்கள், பதவி பற்றிக் கவலையற்று, கடமையை மதித்தவர்கள், கம்யூனிஸ்டுகள் போல, மாஸ்கோ நோக்கி நிற்கும் போக்குக் கொண்டவர்களுமல்ல, — இவை எல்லாம் சரி — ஆனால், இவர்கள், காங்கிரசை விட்டு விலகி, தனியாகக் கட்சி அமைக்கும் காரியத்திலே ஈடுபட்ட உடனே, காங்கிரசும், அதை ஆதரிக்கும் ஏடுகளும், என்னென்ன கூறி ஏசப் போகின்றன, என்பது பற்றி, முன்கூட்டியே யோசித்துப் பார்ப்பது, நலமது. இவர்களின் வீரம், தியாகம், யாவும், மிகமிகச் சாமர்த்தியமான முறையிலே மறைக்கப்பட்டுவிடும் — இவர்கள் பதவி வெறி பிடித்தலைகிறார்கள், சர்க்காரைக் கைப்பற்றும் சதிகாரர்கள், நேருவை நிந்தனை செய்யும் நீசர்கள், என்றெல்லாம், வசைச் சொற்கள், சரமாரியாக வீசப்படும். ஏட்டேச்

(9-ம் பக்கம் பார்க்க)

## பழி சுமத்துவோர் நோக்கு

4-ம் பக்கத் தொடர்ச்சி

பயனில்லை. கோபிக்கும், கண்டிக்கும், தூற்றும், நண்பர்களைப் பார்த்துக் கூறுகிறேன், "கோபம் வருகிறதா! தாராளமாக வரட்டும், கண்டனச் சொற்களை வீசுகிறீர்களா? தாராளமாக வீசுங்கள். பட்டை நாமம், மொட்டைத்தலை, என்று கூறியிருப்பது கேட்டுத்தானே உங்களுக்குக் கோபம் வருகிறது, வரட்டும், வரட்டும், கவலையில்லை ஏனெனில், நாம், உபயோகித்த அந்தப் பட்டப்பெயர்கள், ஒன்றுகூட, நாமாகச் சொன்னதுமல்ல, திராவிடக் கழகத்தார் சொன்னதுமல்ல, இந்தப்பட்டங்களையும், மேலும் பல விளக்கங்களையும், வெளியிட்டிருப்பவர் ஒரு பிராமணர்!

"விடிந்தால் வைகுண்ட ஏகாதசி, முப்பத்து முக்கோடி தேவர்களும் முனிவர்களும், முடிவேந்தர்களும் தொழுதேற்றும் ஆதி முதல்வனை—அரங்கனைத் தரிசிக்க அர்த்த ராத்திரியிலேயே அநேகர் ஆலயம் வந்து கும்பல் கூடி விட்டார்கள். ஆலயத்துப் போய்வர பிரத்தியேக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. கயிறுகட்டிக் கும்பலைக் கண்ட்ரோல் செய்யும் கான்ஸ்டேபுள்கள் ஒரு வரிசை, விழிப்புடன் வேலை செய்யும் 'வாலன்டியர் கோர்'கள் ஒரு வரிசை, அத்ய பாராயணக்காரர்கள் கோஷ்டி ஒரு பக்கம், பட்டை நாமம் சாற்றிய பாகவத கோஷ்டிகள் ஒரு பக்கம், கண்ணடிக்கும் [illegible]ர்களும் [illegible] பதில் சைகை செய்யும் ஸரோஜாக்களும் மற்றொரு பக்கம். வம்பளக்கும் பாட்டிமார்கள் ஒரு பக்கம். அருணோதயத்தில் அரங்கன் எழுந்தருள்வதற்கான திருப்பள்ளியெழுச்சி பாடியாகிவிட்டது. அத்ய பாராயணக்காரர்கள் திருப்பாவை, பல்லாண்டு பாடி முன்செல்ல, வேத பாராயணக்காரர்கள் வேதமோதிப் பின்வரும் காட்சி மிக விமரிசையாயிருந்தது. நம்மாழ்வாருக்கு முக்தி அளித்த நாள், பக்தகோடிகள் அனைவருக்கும் பரமபத வாசல் திறக்கப்படும் நாள். பகவான் எல்லாருக்கும் பவக்கடலைத் தாண்டிச் செல்வதற்கான பரமபத வாசலைக்கடந்து செல்லும் காட்சி கண்கவர் காட்சியாய் விளங்கிற்று.

எல்லோரும் பரமபத வாசல் தாண்டுவதற்கு இடிபடுவதும், இரைச்சல்படுவதும் சொல்ல முடியாது. தோளிலும், இடுப்பிலும் குழந்தைகளைத் தாங்கியவாறு அநேகர் அவதிப்படுவது சொல்லுந்தரமல்ல. காதணி கழன்றதென்ற கதறலும், கழுத்தணி அறுந்ததென்ற அழுகையும், கை வளையல் விண்டதென்ற விம்மலும், ஆடை அவிழ்ந்ததென்ற புலம்பலும் எங்கும் நிறைந்திருந்தது. இதனிடையே பட்டை நாமம் சாற்றி பாண்டுரங்க பஜனை பாடும் பாகவதர்களும் கோல் கொண்டு குரங்குக் கூத்தாடும் கோணங்கி தாஸர்களும், அரிராம கிருஷ்ண பஜனை செய்யும் வீர வைஷ்ணவர்களும் தீபத்தைக்கொண்டு சுற்றித் திரியும் தாதர்களும், படங்களேந்தி வட்டமிடும் மொட்டைகளும் வெகு விநோதமாயிருக்கும். ஊமை, கூன், குருடு, செவிடு, நொண்டி, மொண்டி, சாமுண்டி, சித்திரக் குள்ளன், சால் வயிற்றன், சப்பை மூக்கன், விசித்திரப் பிறவிகள் வரிசையாய் உட்கார்ந்து 'எங்கள் கருமத்தைப் பாருங்கள், தருமத்தைச் செய்யுங்கள்' என்று கையை நீட்டிக் கதறும் காட்சி மனதை உருகச் செய்தது.

உடைந்ததேங்காய் மூடிஒரு கூடை, பழம் பாக்கு வெற்றிலை பத்து கூடை சேர்ந்தாலும், பக்தன் மனது பகவான் மேலே, பட்டாச்சாரி மனசு பணத்து மேலேதானிருக்கும்.

தீபாராத்தியெல்லாம் தட்டு மேலே, கற்பூரார்த்தியெல்லாம் காசு மேலேதான் இருந்தது. இது எல்லாவற்றையும் கடந்து நான் திருப்பி கோபுர வாயில் வெளியில் வந்தது ஒரு பெண்குரல். 'தம்பிடி, தாங்கோ, அவுத்திக்கீரைங்கோ,' என்று சொன்ன உச்சரிப்பு ஒரு விதப் பொருளுடன் காதில் தொனித்தது, என்னை திடுக்கிடச் செய்தது. நான் திரும்பிப் பார்த்தேன். அப்பொழுது அவள் 'தம்பிடி தாங்கோ அவுத்திக்கீரைங்கோ' என்று சொல்லியபடியே கையில் அகத்திக் கீரையை வைத்துக்கொண்டு பல்லிளித்து நின்றது, இன்னும் என் மனதைவிட்டு நீங்கவில்லை."

* * *

எழுதினவர், சூனாமானா அல்ல!— ஒரு பார்ப்பனத் தோழர்!!

படித்தீர்களல்லவா! சொர்க்க வாசல் மகாத்மியம் என்ற தலைப்பிலே ஸ்ரீநிவாசாச்சாரியார் என்பவர், பிரசண்ட விகடன் இதழிலே, வெளியிட்ட கட்டுரை இது. அந்தக் கட்டுரையிலிருந்து, எடுத்துத் தொகுத்த பட்டப் பெயர்களையே, நாம், நமது கட்டுரையின் துவக்கத்திலே, வெளியிட்டோம். இப்போது என்ன சொல்கிறீர்கள்? இந்தச் சூனாமானாக்களுக்குத் தூற்றுவதே தொழில், மதத்தைக் கேலி செய்வதே வேலை, என்றெல்லாம் கூறும், நண்பர்களே, சீனிவாசாசாரியார் எனும் பிராமணர், பிரசண்ட விகடன் எனும் தேசிய இதழில் தீட்டிய கட்டுரையைக் கண்டபிறகு, என்ன சொல்லத் தோன்றுகிறது! அவர், சூனாமானா அல்ல! ஆனாலும், உண்மையை உரைத்திருக்கிறார். உள்ளதை மறைப்பது ஊருக்கு ஊறு செய்யும் என்பதை உணர்ந்து, நமது மக்கள், எங்கு சென்றால், அருள் கிடைக்கும் என்றெண்ணுகிறார்களோ அங்கு, எப்படிப்பட்ட ஆபாசங்கள் காணப்படுகின்றன என்பதை, எடுத்துக் காட்டினார். அவர் கூறியிருப்பதையும் மறுத்துரைக்க முடியாது, அவரை சூனாமானா கோஷ்டியிலே சேர்த்துப் பேசவும் முடியாது. என்ன செய்வதென்று தோன்றாமல் விழிக்கும் பலர், என் மனக்கண்முன் தோன்றுகிறார்கள். அவர்கள் அனைவருக்கும் "நண்பர்களே! நாட்டுக்கு, புதிய வாழ்வு தேடித் தரப் பாடுபடும், அறிவியக்கத்தை, சந்தேகிக்காதீர்கள், அதன் மீது வீண் பழி சுமத்தாதீர்கள், அதைப் புறக்கணிக்காதீர்கள், உடன் சேர்ந்து ஊருக்கு நல்லதைச் சொல்லுங்கள். உண்மையை மறைத்துவிட முடியாது, என்பதை உணருங்கள்" என்று கூறுகிறேன். பழிசுமத்துபவர்களின் பார்வைக்கு, சொர்க்கவாசல் பற்றிய படப்பிடிப்பை வைத்திருக்கிறேன்-பார்த்துப் பயன்பெறட்டும் என்ற எண்ணத்துடன்.

*

முகத்தின் மீதுள்ள தோலின் பருமன் 4.5 மில்லிமீட்டர்.

முதல் ஐரோப்பிய புல்லாங்குழல் (Mouth Organ) ஜெர்மனியிலுள்ள டிராஸின்ஜனில் 1827 ஆண்டு தயாரிக்கப்பட்டது.

குதிரையால் இழுக்கப்படும் முதல் சவாரி வண்டி லண்டன் தெருக்களில் 1829 ஜுலை 4ல் முதல் ஓடத் தொடங்கியது. முதல் சவாரி 'பஸ்' 1904ம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டது.

தொடர் கதை கற்பனைச் சித்திரம்



[21—3—48 தொடர்ச்சி]

எப்படியாவது அம்மாவிடமோ அக்காவின் விஷயமாகக் கூறிவிடுவது என்று தீர்மானித்தேன். ஐயோ, அக்காவை அம்மா கோபிப் பார்களே என்று எண்ணி, அடக்கிக் கொண்டே வந்தேன். கடைசியில் அன்று அக்காவிடமே விஷயத்தைக் கூறி அடக்கிவிடவேண்டும் என்று எண்ணி, அக்காவின் அறைக்குச் சென்றேன். அப்போது தான் அக்கா மிக உருக்கமாக "குகன் வாராத காரணம் என்னடி" எனப் பாடிக் கொண்டிருந்தாள். நான் "அக்கா! நீ செய்வது எனக்குக் கொஞ்சங் கூடப் பிடிக்கவில்லை" என்று ஆரம்பித்தேன். திடுக்கிட்டு எழுந்து அக்கா, "என்னடி உளறுகிறாய்" என்று கேட்டாள். "எல்லாம் எனக்குத் தெரியும்" என்றேன்.

"என்னடி தெரியும்" என்று கேட்டுக்கொண்டே, அக்கா என் ஜடையைப் பிடித்து இழுத்து தலையில் குட்டினாள். எனக்குக் கோபம் அதிகரித்துவிட்டது.

"வெட்கமில்லையே, மானமில்லையே பாட்டு வாத்தியார் மகனோடே உனக்கென்ன பேச்சு. ஆகட்டும் அம்மாவிடம் சொல்லிவிட்டு ... பார்க்கிறேன்" என்று கூறினேன்.

"அப்படி, காரி முகத்திலே உமிழடி, விமலா. கழுதைக்கு கற்பூர வாசனை தெரியுமா? அவள் கெட்டுப் போறதுக்குக் காலம் வந்துதான் இந்த வேலையிலே இறங்கிவிட்டாள். நாலுபேருக்குத் தெரிந்தால் காரித் துப்புவார்கள். இது என் வயறு செய்த பாக்கியம்" என்று அதே நேரத்தில் என் தாயார் ஆக்ராஷத்துடன் கூறிக்கொண்டே உள்ளே வந்தார்கள். அப்போதுதான் எனக்குத் தெரியும், அக்காவின் சமாச்சாரத்தை அம்மா முன்பே தெரிந்து கொண்டார்கள் என்பது. அது மட்டுமல்ல. பாட்டு வாத்யாரையே அன்று முதல் வரவேண்டாம் என்றும் சொல்லிவிட்டார்களாம். அம்மா திட்டின திட்டுக்கெல்லாம், அக்கா ஒரு வார்த்தைகூட பதில் பேசவில்லை. கட்டிலின்மீது கவிழ்ந்து படுத்துக்கொண்டு, விம்மி விம்மி அழுதாள். அம்மா போய்விட்ட பிறகு, நான்தான் சமாதானங் கூறினேன். அக்காவுக்கு மனம் நிம்மதியாகவில்லை எனக்கும், அக்காவுக்கு இவ்வளவு கஷ்டம் வந்ததே என்று வருத்தம் இருந்தாலும் முருகனிடம் இனி அக்கா சேர முடியாது அல்லவா? மருங்கனூர் ஜமீன்தாரோ, வேறு எங்கச் சீமானோ அக்காவின் நாயகனாக வருவார். அக்காவுக்கு பங்களா வாங்கித் தருவார். பணத்தில் குளிப்பாள் என்று ஆசை. பாபம்! அவள் ஆசைக்கு மண் போட்டு பிறகு, அவளுக்கு சொர்ணாபிஷேகம் செய்தாலும் அவளுக்கு திருப்தி ஏற்படுமா என்று எனக்கு அப்போது தோன்றவில்லை.

அம்மா அக்காவைத் திட்டிய தோடு நிற்கவில்லை வாத்யாரிடம் முருகனைப் பற்றி கூறிவிட்டாள், பாட்டுக்கும் வரவேண்டாமெனக் கூறிவிட்டாள். முருகனைப் பிடித்து அவன் தகப்பனார் வாட்டினார். அவருக்கு பிள்ளை பிறந்து பிழைப்பிலே மண் போட்டதென்றால் வருத்தமாகத்தானே இருக்கும். சண்டை முற்றிக் கடைசியில் முருகன் வீட்டைவிட்டே போய்விட்டான். ஊரைவிட்டே போய்விட்டான். ஐந்தாறு வருஷங்களுக்குப் பிறகு என் ஊரில் முருக பாகவதராக வந்து நாடகம் நடத்தினான். இடையிலே எங்கெங்கோ சுற்றினான். பிறகு சொன்னான் தன் கதையை. அக்கா ரொம்பக் கஷ்டப்பட்டாள். அம்மா ஒவ்வொரு நாளும் புத்திமதி கூறுவாள். ஒவ்வொன்றுக்கும் என்னைத்தான் உதாரணம் காட்டுவார்கள்.

"அதோ பாரடி உன் தங்கை விமலாவை. அதைப் பார்த்துக்கூட உனக்கு புத்தி வரவில்லையே. அவன் என்னடி செய்ய முடியும்? அவன் பிழைக்கிறதே பிரம்மப்பிரயத்தனம். அவன் ஓடிவிட்டான், நீ அகப்பட்டிருந்தால் உன்னையும் இழுத்துக் கொண்டு ஓடி, அலையவைத்து நடு வீதியிலே விட்டிருப்பான். நல்ல வழி நேரே இருக்க கோணல் வழி குறுக்கே போயிற்றே" என்று இதோபதேசம் செய்வாள். அக்கா அம்மா எதிரிலே ஒன்றும் பேசமாட்டாள். என்னிடம்மட்டும் கூறுவாள், பணம்! பணம்! இதுதான் அம்மாவுக்குத் தெரியும். அவர் என்ன, ஒரு குடும்பத்தைக் காப்பாற்றமாட்டாரா? கூழோ தண்ணியோ குடித்தாலும் மானத்தோடு வாழலாமே. என்றைக்குத்தான் இந்த புத்தி வருமோ நம்ம ஜாதிக்கு" என்று.

"அப்படி என்றால் நீ கலியாணம் செய்துகொள்ளப் போகிறாயா" என்று நான் கேட்டேன் கிண்டலாக.

"ஏன் செய்துகொள்ளக்கூடாது" என்று கோபத்துடன் அக்கா கேட்பாள்.

"யாரைக் கலியாணம் செய்துகொள்வது" என்பேன் நான்.

"இஷ்டப்பட்டவர்களை" என்று அழுத்தந் திருத்தமாகக் கூறுவாள் கமலா.

"சுத்த பைத்தியம். நம்மை யாரக்கா கலியாணம் செய்துகொள்வார்கள்" என்று நான் ஆச்சரியத்துடன் கேட்பேன்.

"யாரக்கா, கலியாணம் செய்து கொள்வார்கள்" என்று கையாண்டி செய்வாள் கமலா.

அக்காவின் பிடிவாத குணம், அம்மாவின் உபதேசத்தால் போகவில்லை. கோயில் குருக்கள் எங்கள்வீட்டுக்கு வருவார் என்று சொன்னேனே, அவர்தான், "அவாளவாளின் குல தர்மானுஷ்டப்படி நடக்க வேண்டாமோ" என்று ஆரம்பிப்பார், உள்ளூர் வெளியூர் தாசிகள் கதை எல்லாம் கூறுவார். ஒவ்வொரு சீமானுக்கும் உள்ள குணாதிசயங்களை

வர்ணிப்பார். பக்கத்து வீட்டுப் பார்வதி வைரத்தோடு வாங்கிய கதை, வளையல் புதிதாகச் செய்த கதைகளைக் கூறுவார். ஆண்டவன் தாசியாகப் பிறப்பித்தான். அவன் கட்டளையை மீறலாமா என்று சாஸ்திரம் ஓதுவார்! தாசி என்றால் என்ன கேவலம், தேவர்-அடியாள் என்று அர்த்தம். பகவானுக்குத் தொண்டு செய்வது! இது மகா சிரேஷ்டமல்லவா என்பார். தெரியாமலா நமது முன்னோர்கள், இப்படி தாசிகளை கோயில்களில் ஏற்பாடு செய்தார்கள் என்று கேட்பார். ஏதோ குலதர்மத்துக்கு ஏற்றபடி கோயிலிலே தொண்டு செய்யவேண்டும். குடும்ப சம்ரட்சணார்த்தம், யாரோ ஒருவனோடு வாழவேண்டும். இதுதானே முறை என்று கூறுவார். தேவலோகத்திலேகூட உண்டே; மேனகை, திலோத்தமை ரம்பை ஊர்வசி, இவர்கள் எல்லாம் யார்? என்று கேட்பார். குருக்களின் பேச்சு கேட்டுக் கேட்டு, அக்கா திருந்தினாள்—திருந்தினாள் என்று அப்போது எண்ணினேன், கெட்டாள் என்று இப்போது கூற வேண்டும்.

அக்காவின் உறுதி, முருகன் மீதிருந்த ஆசை எல்லாம் பறந்தது! மாயனூர் ஜமீன்தாரின் நேசம் கிடைத்தது. விதவிதமான நகைகள்! பெட்டி பெட்டியாகப் புடவைகள். வண்டிகுதிரை! ஆட்கள்! ஜமீன்தார், வாரி இறைத்தார் பணத்தை. அக்காவுக்கு பிறகு, புதுமோஸ்தர் புடவை புது தினுசு வளையல், மேல்ஆசை போயிற்று. முருகனாவது கந்தனாவது! ஜெமீன்தார் அக்காபோட்ட கோட்டை மீறுவதில்லை, அக்காவைக் கண்டுகண்டு அம்மா பூரித்தார்கள். எனக்கும் கொண்டாட்டந்தான். ஜெமீன்தாரிடம் நான் பேச கூச்சப்பட்டாலும், அம்மா தாராளமாக இருக்கச் சொல்வார்கள். அவரும், குட்டி! தண்ணீர் கொண்டுவா, விசிறி எடு, வெற்றிலைப் பெட்டி எடு என்று எனக்கு வேலை கொடுத்தபடி இருப்பார். அக்காவுக்கு நகைசெய்தால் எனக்கும் செய்வார். இவ்வளவு சந்தோஷமாக இருக்கும் நாட்களிலே ஒரு நாள் நான் புஷ்பவதியானேன். தடபுடல் சொல்லவேண்டியதில்லை. கச்சேரிகளும் விருந்தும் பலம். ஆனந்தமாக வாழ்ந்து வந்தோம். இப்படியிருக்கும்போது ஒரு நாள் நான் மாடியிலே உலவிக்கொண்டிருந்தேன். எதிர்வீட்டுமாடியிலே புதிதாக ஒரு வாலிபர் உலவினார். யார் இது புதிதாக இருக்கிறாரே என்று எண்ணி, உற்று நோக்கினேன். இளைஞரும், பார்த்தார். அது தான் முத்து! புன்சிரிப்பாக என்னைப் பார்த்தார். நான்கூச்சமடைந்து தலைகுனிந்தேன். அவர் கனைத்தார். நான் மறுபடியும் அவரைப் பார்த்தேன். சிரித்தார். நான் உள்ளே ஓடிவிட்டேன். வியர்வை பொழிந்துவிட்டது. எனக்கு மார்பு படபடவென அடித்துக் கொண்டது. முகமே மாறிவிட்டது. அன்றுதான் "ஆசை" என்பது எனக்குத்தெரிந்தது.

என் ஆசை வளர்ந்தது. அவர் தான் அதனை வளர்த்தார். மாலையிலே அவரது சீட்டைச் சத்தம் கேட்கும், நான்மாடிக்குச் செல்வேன். இருவரும் அலங்காரத்துடன் தான் இருப்போம். அவர்கையிலே ஏதாவதுபுத்தகம் இருக்கும். என்னிடம், பின்னல் குட்டை இருக்கும். கண்கள்ஒன்றை ஒன்று பார்க்கும். கலகலவெனச் சிரிக்கமாட்டோம். வளர்த்துவானேன், அக்காவுக்கு முருகன்மீது இருந்த 'பித்து' எனக்கு,முத்துமீது ஏற்பட்டுவிட்டது. அவர் சேதிபூராவும் விசாரித்துத் தெரிந்து கொண்டேன். அவர் சீமைக்குப் போகிறார் படிக்க, இது அவர் அத்தைவீடு, என்பது தெரிந்தது. இடையே கடிதங்கள் பறந்தன எங்களுக்குள். எப்படியோ எனக்கொரு தைரியம். எங்கள் வீட்டு புதிய வேலைக்காரியும் எனக்கு உதவியாக இருந்தாள். காதற்கனிரசமே, கண்மணியே, கட்டிக்கரும்பே, இன்பமேஎன்றஅடுக்கு வார்த்தைகள் அம்புகள் போல்பாய்ந்தன. நான் சபலித்துவிட்டேன். முருகனை மணந்து வாழ்வதையே, மேலானது என்று என் அக்காமுன்பு சொன்னாளல்லவா, அதெல்லாம் என் கவனத்திற்கு வந்தது, முத்து பி. ஏ. பிரபல குடும்பம். இவர் என்னை மணம் புரிந்துகொண்டால், எவ்வளவு சந்தோஷமாக வாழலாம் என்ற ஆசை பிறந்தது. தன் உயிரையே தத்தம் செய்வதாகவும் அவர் எனக்குக் கடிதம் எழுதியிருந்தார். நான் நம்பினேன். ஒருநாள் துணிந்து "என்னைக் கலியாணம் செய்துகொள்ளச் சம்மதமா?" என்று எழுதிக்கேட்டேன். டாக்டர்! என்வாழ்க்கையே அந்தக் கடிதத்திற்கு [illegible] திருந்தது. [illegible] முத்துவிடமிருந்து!

"முடியாது என்று வந்திருக்கும்" என்று சுந்தரேசன் கூறினான்.

"இல்லை! ஆகட்டும் என்று பதில் கிடைத்தது. என்மனம் துள்ளிற்று. அக்கா தோற்றாள், நாம் ஜெயித்தோம், அக்கா ஒருபாட்டுக்காரனைக் கலியாணம் செய்துகொள்ளமுயன்று முடியாது போய்விட்டது. நமக்கோ ஒரு பி. ஏ. வருகிறார், என்று நான் கொண்ட சந்தோஷம் இவ்வளவு அவ்வளவல்ல!

உடனே நான் அக்காவிடம் விஷயத்தைக்கூறினேன். கமலா அன்று விழுந்து விழுந்து சிரித்த சிரிப்பு இருக்கிறதே அது இன்னமும் என் காதிலே கேட்கிறது.

"பலேடி விமலா! பலே! சரியான 'கை'தான் பிடித்துவிட்டாய்" என்றாள். எனக்குக் கோபந்தான்; இருந்தாலும் என்ன செய்வது? முன்னே நான் அவளைக் கேலிசெய்யவில்லையா?

"அக்கா கேலிசெய்யவேண்டாம், அவரும் சம்மதிக்கிறார்; அம்மாவிடம் சொல்லி......................என்று இழுத்தேன்.

"ஆஹா! நல்ல முகூர்த்தம் பார்த்துவைக்கிறேன்" என்றாள் கமலா.

"உன் தங்கை, உனக்கு வேண்டுமானால் செய். இல்லையானால் உனக்கொரு தங்கை இல்லை என்று முடிவு செய்துகொள்" என்று மிடுக்காகச் சொன்னேன்.

"அவ்வளவு ஏறிவிட்டதா தலைக்கு! ஏது, ஆசாமி ரொம்பகெட்டிக்காரன் போலிருக்கு. சரிதான், பொம்மை போலசிங்காரித்துக்கொண்டுஉலாவி சிரித்து, உன்னை மயக்கிவிட்டானு, சரி" என்றாள் கமலா.

பிறகு சிலநாட்கள், நான் முன்பு கமலாவுக்குப் படித்த பாடத்தை அவள் எனக்குத்திருப்பிப்படித்தாள்.

"அக்கா! அந்தக் காலத்திலே நீ சொன்னதை நான் சிறுபெண்ணாக இருந்ததால், தவறு என்று எண்ணினேன். என்னை மன்னித்துவிடு. இப்போது அதற்காக என்மீது பழிவாங்காதே" என்றுகெஞ்சினேன். கமலாவுக்கு மனம் இளகி, என் தலையைத் தடவிக்கொடுத்து "விமலா! விஷயம் தெரியாமல் [illegible] வேதனைப்படு [illegible] அனுபவிக்கத்தான் [illegible] விரும்புவர்களே [illegible] கலியாணம் செய்து

கொள்ளமாட்டார்கள். சும்மா சொல்லுவார்கள். பிறகு கலியாணம் செய்துகொண்டால்தானு, தாலி ஒன்று கட்டவில்லை, மற்றப்படி, உன்னை என் சொந்த மனைவி போலவே நடத்துகிறேன் என்று கொஞ்சுவார்கள். பைத்யமே, அதிலே மயங்காதே, நானுந்தான் இன்று சொல்லுகிறேன் உண்மையை, முருகன்மீது எவ்வளவோ ஆசையாக இருந்தேன். அவன் எனக்காக உயிரைக்கொடுப்பேன் என்றான். பிறகு ஏன் நான் அவனை மறந்துவிட்டேன் ................” என்று முடிப்பதற்குள் நான், “ஆமாம்! குருக்கள் ஏதேதோ சொல்லி உன் மனதைக்கலைத்துவிட்டார்” என்று பட படப்புடன் கூறினேன். “முட்டாளே நீயும்அப்படித்தான் எண்ணுகிறாய், அம்மாவும்அப்படித்தான் நினைக்கிறார்கள், குருக்களும் தன் சாமர்த்தியத்தினுலேயே என்னை ‘மசிய’ வைத்ததாகச் சொல்கிறார். ஆனால் நான் இணங்கியதற்குக்காரணம் வேறு.

(தொடரும்)

### அசட்டுத்தனமான அடக்குமுறை.

—

சென்னை சர்க்கார், கருப்புச் சட்டைப்படை மீது விதித்த தடை உத்திரவு பற்றி, ‘இந்துஸ்தான்’ பத்திரிகை 7—3—48ல், கண்டித்து எழுதியிருக்கிறது.

கருஞ்சட்டை ஸ்தாபனத்தின் மீது சென்னை சர்க்கார் விதித்துள்ள தடை தவறான தந்திரம். அதுமட்டுமல்ல, யாரைப் பாதுகாப்பதற்கென அது பிறப்பிக்கப்பட்டதோ, அவர்களுக்கு இதனால் இடைஞ்சல் அதிகரிக்கும். ஹிந்து மகா சபை, ராஷ்ட்ரீய சங்கம் போன்று தலைவர்களைக் கொலை செய்யும் திட்டமுள்ள ஸ்தாபனங்களை தடை செய்யவேண்டியது நியாயம். தூஷணைப் பிரசாரத்தால் யார் எதுமபையும் நொறுக்கிவிட முடியாது. அப்படி யாருக்காவது ஹிம்சை செய்தால் அவர்களை ஒடுக்க சாமான்ய சட்டத்தில் நிரம்ப அதிகாரம் இருக்கிறது. அப்படிக் இருக்க இம்மாதிரி அசட்டுத்தனமாக அடக்குமுறையைக்கையாண்டு சென்னை சர்க்கார் அனுவசியமான அபவாதத்திற்குள்ளாகி விட்டனர்.

* * *

நேர்மையுடன், இந்துஸ்தான்’ இதுபோல், சர்க்காரின் போக்கைக் கண்டித்து எழுதியது காண மகிழ்கிறோம்—மேற்படி இதழைப் பாராட்டுகிறோம். பொதுமக்களின் உரிமைகள், எக்காரணத்தைக்கொண்டு ஆள்பவர்களால் பறிக்கப்படுகிறதென்றாலும், பத்திரிகைகள் கண்டிக்கவேண்டும். அப்போது தான், நாட்டிலே பாசிசம் வளராமலிருக்கும். ‘இந்துஸ்தான்’ இதழ் இந்த உண்மையை உணர்ந்து, ஆள்வோர், கையாண்ட அடக்குமுறையைக் கண்டித்துத்திருக்கிறது-கண்ணியத்துடன்.

ஆனால், அதேபோது, கருப்புடை தரித்துள்ள திராவிடர் கழகத்தார். ‘தூஷணைப் பிரசாரம்’ செய்து வருவதாகத், தவறாக, எண்ணிக்கொண்டிருப்பது காண வருந்துகிறோம். தூஷணைப் பிரசாரம், திராவிடர் கழகத் திட்டமல்ல. நாட்டிலே, பன்னெடுங்காலமாக இருந்து வரும், ஜாதிபேதக் கேடுகளைக் களைந்தெரிந்து, எல்லோரும் ஓர் குலம் என்ற இலட்சியம், செயலமுறைக்கு வரவேண்டும் என்பது, கழக நோக்கம். இதற்கான பிரசாரமே நடைபெற்று வருகிறது.

ஒரு வகுப்பினரையோ, ஒரு சிலரையோ, தூஷிப்பதாலே, என்ன பலன ஏற்பட முடியும்! பலனற்ற வேலை செய்ய, இப்படி. ஒரு கழகம் பல ஆண்டுகளாகப் பணியாற்றுமா! அதிலே பல்லாயிரக் கணக்கானவர்கள் பங்கு கொள்வரா!

நாட்டிலே, மற்ற கட்சியினர் செய்யத் தவறிவிட்டனர், சமுதாயத்தின் சீர்கேட்டினைப் போக்கும் பணியினை. திராவிடர் கழகம், ஒன்றுதான், இதனை, வெற்றிகரமாகச் செய்துவருகிறது. இந்த வெற்றியினால், பழய செல்வாக்கு பறி போகிறது என்பதை அறிந்து சில சுயநலமிகள், திராவிடர் கழகம், தூஷணைப் பிரசாரம் புரிகிறது என்று, கூறுகின்றனர். ‘இந்துஸ்தான்’ இத்தகைய தன்னலக்காரரின் பேச்சை, உண்மையென நம்பி, ‘தூஷணைப் பிரசாரம்’ புரிபவர் திராவிடர் கழகத்தார், என்று எண்ணுகிறது போலும். பிறர் பேச்சைக் கேளாமல், இந்துஸ்தான், திராவிடர் கழகத்தாரின் கொள்கை, திட்டம், பேச்சு, ஆகியவற்றைக் கவனித்துப்பார்த்தால், தனது தீர்ப்பை, மாற்றிக்கொள்ளும்—நிச்சயமாக. ✻

---

### செங்கல்பட்டு ஜில்லாகோர்ட்டு

### S. C. O. P. 24 of 1948.

—

செங்கல்பட்டு ஐரோட்டிலிருக்கும் கன்னியப்ப முதலியார் குமாரர் முனிவேலு முதலியார்—மனுதார்.

—VS—

1. கண்ணம்மாள், 2. சாரதாம்பாளம்மாள்
3. கணேச முதலியார்,

ரெஸ்பான்டென்டுகள்

செங்கல்பட்டு பெரிய நத்தத்திலிருந்த காலஞ்சென்ற காசாம்பாளம்மாள் 7—12—47ல் எழுதிவைத்திருக்கும் உயில்படிக்கு ஷியாருக்கு வரவேண்டிய செங்கல்பட்டு ஸ்மால்காஸ்கோர்ட்டு S. C. 194 of 1947 டிக்ரி கட்டின வசூல் செய்ய மனுதார் தனக்கு 1925-ம் வருஷத்திய 39-வது ஆக்டுபடி Succession Certificate கொடுக்கும்படி தாக்கல் செய்திருக்கும் மனு 31—3—48 தினம் வாய்தா போடப்பட்டிருக்கிறதென்பதை இதனால் தெரிவிக்கப்படுகிறது.

செங்கல்பட்டு. A. வேதாந்த ஐயங்கார்.
19-3-48 மனுதார வக்கீல்.

---

பிரிட்டனில இவ்வருடம் சுமார் 1523000 ஏகராக்களில் உருளைக்கிழங்கு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இது கடந்த பல வருடங்களை விட மிக அதிகமானது.

சோப்பு ஜலத்தால் கருங்கூந்தலை விரைவில் மிருதுவாக்கலாம். ஆனால் பழுப்பு உரோமமும், நரைத்த உரோமமும் மிருதுவாக அதிகநேரம் பிடிக்கின்றன.

2. சீனு முழுவதும் சுமார் 300 சினிமா மேடைகளே உள்ளன.

3. உலக முழுவதிற்கும் ஒரு வருடத்திற்குத் தேவைப்படும் மின்சார சக்தியை 200—250 டன் நிறையுள்ள யுரேனியத்திலிருந்தோ அல்லது தோரியத்திலிருந்தோ சப்ளை செய்ய முடியும்.

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at “Dravida Nadu” Press,
95. Tirukkachinambi Street. Conjeeveram.